பக்கங்கள்: 18

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 31 செவ்வாய்க்கிழமை 17.09.2019 கதிர் 316

**இனிது ரகசியம் அல்ல!**

ஆசியாவில் மிகவும் உயரமான தாமரைக் கோபுரம் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் திறந்து வைக்கப்பட்டது.

அதன் உயரம் 356.3 மீற்றர்கள். பாரீஸின் ஈபிள் கோபுரம் அதன் உச்சியில் பக்கம் 02

## சோபை இழந்தது எழுக தமிழ்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 17

தமிழ் மக்களுக்கான தீர்வை வலியுத்தியும் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைச் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் வகையிலும் பக்கம் 02

## முடங்கியது யாழ். குடாநாடு



யாழ்ப்பாணம், செப். 17

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை வலியுறுத்தியும், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் வகையிலும், யாழ்ப்பாணத்தில் நேற்று முற்பகல் எழுக தமிழ் பேரணி பக்கம் 05

# தாமதமின்றித் துணிச்சலுடன் இந்தியா தமிழரின் இருப்பைக் காக்கவேண்டும்

### ‘எழுக தமிழ்’ நிகழ்வில் விக்னேஸ்வரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 17

தமிழ் மக்கள் வடக்கு – கிழக்கு இணைந்த தமது தாயகத்தில் சுய நிர்ணய உரிமையுடன் வாழும் வகையில் இந்தியா தீர்வு ஒன்றைக் கொண்டுவரும் என்று எமது மக்கள் திடமாக நம்புகின்றார்கள். இலங்கை இனப் பிரச்சினை தொடர்பில் இந்தியா இதுவரை கடைப்பிடித்து வரும் மென்போக்கு நிலையில் இருந்து விலகி தமிழ் மக்களின் இருப்பையும் அடையாளத்தையும் பாதுகாக்கும் வகையில் துணிச்சலான நடவடிக்கைகளைத் தாமதம் இன்றி எடுக்க வேண்டும் என்று இந்த ‘எழுக தமிழ்’ மூலம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

– இவ்வாறு தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தினார். ‘எழுக தமிழ்’ எழுச்சிப் பேரணியின் நிறைவில் இடம்பெற்ற பிரகடன நிகழ்வில் தலைமை உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். பக்கம் 03

## சர்வதேசம் தலையிட்டு தமிழருக்கு காத்திரமான தீர்வைத் தரவேண்டும்

### சுரேஷ் எழுக தமிழ் நிகழ்வில் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 17

தமிழ்மக்களின்தேசிய இனப்பிரச்சினைக்குச் சர்வதேச சமூகம் தலையீடு செய்து காத்திரமான தீர்வு வழங்கவேண்டும் எனத் தெரிவித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்தலைவர் சுரேஷ்பிறேமச்சந்திரன், வடக்கு–கிழக்கு இணைப்பிற்கு இந்திய அரசு கரிசனை பக்கம் 02

## நவம்பர் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல்!

### 21 ஆம் திகதி சனிக்கிழமையன்று உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும்

கொழும்பு, செப்.17

அடுத்துநடைபெறவேண்டிய ஜனாதிபதித் தேர்தலின் ஏற்பாடுகள் குறித்துநேற்றுக் கூடி ஆராய்ந்த தேர்தல்கள் ஆணையகம்பெரும்பாலும் நவம்பர் 16 ஆம் திகதி தேர்தலை பக்கம் 05

## சஜித் பிரேமதாஸ இன்று காலை விசேட ஊடகவியலாளர் சந்திப்பு

### முக்கிய முடிவை அறிவிப்பார்

கொழும்பு, செப். 17

ஜனாதிபதி தேர்தல் குறித்து இன்று காலை விசேட செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்துகிறார் அமைச்சர் சஜித் பிரேமதாஸ. இதன்போது முக்கிய பக்கம் 03

## பேரணியில் சிறிதரன் எம்.பி.



யாழ்ப்பாணம், செப். 17

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற எழுக தமிழ் பேரணியில் தமிழ்த் தேசி பக்கம் 03

## கட்சிகளின் செயலர்களுடன் தேசப்பிரிய இன்று சந்திப்பு

கொழும்பு, செப். 17

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் அல்லது அக்கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் இன்று செவ்வாய்க் பக்கம் 02

## தாமரைக் கோபுரம் நேற்று ஜனாதிபதியினால் திறப்பு

### ஒரு வாரத்தின் பின் மக்கள் பார்வைக்கு




கொழும்பு, செப். 17

கொழும்பு நகரை அலங்கரிக்கும் வகையிலும் இலங்கையை ஒரு பாரிய தொலைத்தொடர்பு பக்கம் 02

## இ.போ.ச. பஸ் பணியாளர்கள் இன்றும் பணிப்புறக்கணிப்பு



கொழும்பு, செப். 17

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை தொடர் பக்கம் 02

## விவசாயக் கண்காட்சி இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 17

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் மற்றும் விவசாய ஆராய்ச்சி நிலையம் என்பன இணைந்த வளாகத்தில் இன்று முதல் எதிர்வரும் வெள்ளி வரை விவசாயக் கண்காட்சி பக்கம் 02

காலைக்கதிர் Kalaikkathir



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள கூம்பு வரை ஆக 324 மீற்றர்தான். அதை விட இது உயரம். உலகின் உயர்ந்த கோபுரங்களின் வரிசையில் ஒன்றாக இது மதிக்கப்படுகின்றது.

இந்த உயர்ந்த தாமரைக் கோபுரத்தின் திறப்பு விழாவின் பின்னாலும் ஓர் உயர்ந்த அரசியல் சர்ச்சை உண்டு என்பதுதான் 'லோட்டஸ்ட் டவர்' பற்றிய ' லேட்டஸ்ட்' தகவலாகும்.

நேற்றைய திறப்பு விழாவில் முக்கிய இரண்டு பிரமுகர்கள் மிஸ்ஸிங். ஜனாதிபதியும் சபாநாயகரும் பிரசன்னமாகினர். ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தராஜபக்ஷவும்வரவில்லை.

ஊழல், மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு நேற்றுப் பிரசன்னமாக வேண்டியவரானார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அந்த விசாரணையில் தன்னைக் கொண்டுபோய் மாட்டி விட்டமைக்காக ஜனாதிபதி மீது பிரதமருக்குக் கோபமோ கோபம். அதனால்தான் நேற்றைய நிகழ்வுக்குப் பிரதமர் வரவில்லைப் போலும்.

ஆனால், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற முறையில் தாம் பங்குபற்றாதவிடத்து தமது கட்சியின் பிரதித் தலைவர் என்ற முறையில் சஜித் பிரேமதாஸவைத் தமக்குப் பதிலாக அந்த இடத்துக்கு ரணில் அனுப்பி வைத்திருக்கலாம். அவரை அனுப்பவில்லை. சபாநாயகர் கரு ஜயசூரியவைத்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பி வைத்தார். அதற்குக் காரணம் உண்டாம்.

ஜனாதிபதி மைத்திரிபாலாவுக்கு எரிச்சலூட்டத்தான் அந்த ஏற்பாடு. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளராக சஜித் பிரேமதாஸா போட்டியிடுகின்றமையையே மைத்திரிபால சிறிசேன விரும்புகின்றார். ஆனால் சஜித்துக்குப் பதிலாகத் தான் அல்லது கரு ஜயசூரிய களம் இறங்குகின்றமையைத்தான் ரணில் திட்டமாக வைத்துள்ளார். சஜித்தை வெட்டி, இந்த நிகழ்வில் கரு ஜயசூரியவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் ஜனாதிபதி மைத்திரிக்குக் குடைச்சல் கொடுக்கும் நகர்வை முன்னெடுத்திருக்கின்றார் பிரதமர் ரணில்.

இப்படி ரணில் காய் நகர்த்த, மறுபக்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தவின் விடயம் – கோபம் – வேறு மாதிரியாக உள்ளது.

இந்தத் தாமரைக் கோபுரத் திறப்பு விழாவுக்குத் தவறாமல் வரும்படி கடந்த வாரம் பிறிதொரு நிகழ்ச்சியில் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாய் மூலம் அழைப்பு விடுத்தாராம். மஹிந்தரும் அதற்கு வெறுமனே தலையாட்டி வைத்தார். ஆனால், உத்தியோகபூர்வ அழைப்பு ஏதும் நேற்று வரை மஹிந்தருக்குக் கிடைக்கவில்லையாம். அதனால் நேற்றைய நிகழ்வுக்கு அவர் போகவில்லை.

ஆனால், அப்படி அந்நிகழ்வில் பங்குபற்றாமல் விட்டமை நல்லதுக்குத்தான் என்று இப்போது கருதுகின்றார் மஹிந்தர் என நேற்றிரவு அறிய வந்தது.

அந்தத் திறப்பு விழாவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரைதான் அதற்குக் காரணம்.

இந்தக் கோபுரத்தைக் கட்டுவதற்காக 2012 ஆம் ஆண்டில் சீன நிறுவனம் ஒன்றுக்கு இலங்கை அரசு முற்பணமாக இரு நூறு கோடி ரூபாவைக் கொடுத்துள்ளது என்றும் –

ஆனால், பின்னர் அது பற்றி விசாரித்துப் பார்த்தபோது அந்தச் சீன நிறுவனம் கொடுத்த முகவரியில் அப்படி ஒரு நிறுவனமே இல்லை என்பது தெரியவந்தது என்றும் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றைய திறப்பு விழா உரையில் குறிப்பிட்டமைதான் மஹிந்தரைச் சீற்றத்தில் ஆழ்த்தியிருப்பதாகத் தெரிகின்றது.

மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்ட இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகக் கூறப்படும் 2012 இல் இலங்கை அரசின் தலைவராக இருந்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான். அவரின் அந்த அரசில் மைத்திரிபால சிறிசேன ஓர் அமைச்சர்.

அப்படி ஒரு சம்பவம் உண்மையில் நடந்திருக்குமானால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமக்கு அது குறித்துத் தெரிய வந்ததும் தாமதிக்காது அது பற்றி விசாரித்து, குற்றமிழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் அல்லவா?

அப்படிச் செய்யாமல் இருந்துவிட்டு, இந்த நிகழ்வுக்குத் தன்னையும் அழைத்து வைத்துக்கொண்டு, அப்படி ஒரு குற்றச்சாட்டைக் குறிப்பிட்டு – நேரடியாக இல்லாவிட்டாலும் – சுற்றிவளைத்துத் தன்னை அவமானப்படுத்தி அகௌரவப்படுத்தவே ஜனாதிபதி மைத்திரி திட்டமிட்டிருக்கின்றார் என மஹிந்தர் நேற்று மாலையில் கறுவிக் கொண்டிருந்தார் என அறிய வந்தது.

சீன உதவித் திட்டத்துடன் அமைக்கப்பட்ட ஆசியாவின் மிக உயர்ந்த கோபுரத்தைத் திறக்கும் நிகழ்வில் சீனத் தூதுவரையும் வைத்துக் கொண்டு இல்லாத ஒரு சீன நிறுவனத்தின் பெயரில் பெரும் நிதி மோசடி நடந்திருப்பது போன்ற பகிரங்கக் குற்றச்சாட்டை ஜனாதிபதி மைத்திரிபால வெளிப்படையாகக் கூறியிருக்கின்றமை நாட்டுக்கே அவமானமானது, நாட்டின் ஜனாதிபதிப் பதவிக்கே பொருத்தமற்ற செயற்பாடு என மஹிந்த தரப்பினர் கூறுகின்றனர் எனவும் அறிய வந்தது.

'லோட்டஸ்ட் டவர்' திறப்பில் இன்னும் 'லேட்டஸ்ட்' அரசியல் சங்கதிகள் உண்டு. பிறகு சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவற்றைப் பார்ப்போம்.

- மின்னல் -

## இ.போ.ச. பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் அரசு உரிய பதிலை நேற்று வழங்கதமையால் தொழிற்சங்க நடவடிக்கை இன்று செவ்வாய்க்கிழமையும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் இன்றும் யாழ்ப்பாணம் சாலை ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தால் நாடு முழுவதும் அரச பஸ் சேவைகள் பாதிக்கப்பட்டன. இதனல் மக்கள் போக்குவரத்தில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

வடக்கிலும் இ.போ.ச. ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பை தமக்கும் வழங்குமாறு கோரி கால வரையறையற்ற பணிப்புறக்கணிப்பை நாடு முழுவதும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் அனைவரும் மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சோபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்ட எழுக தமிழ் பேரணி சோபிக்கவில்லை. சில ஆயிரக்கணக்கான மக்களே இதில் பங்கேற்றனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த எழுக தமிழ் பேரணியில் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அது நடைபெறவில்லை.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எழுக தமிழ் பேரணி நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது. இந்தப் பேரணி நடைபெறுவதை முன்னிட்டு வடக்கு – கிழக்கில் கதவடைப்புக்கும் பேரவை அழைப்பு விடுத்திருந்தது. இதற்கமைய யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தின் ஒரு சில பகுதிகளைத் தவிர ஏனைய இடங்களில் கதவடைப்பு மேற்கொள்ளப்பட்டு பலரும் எழுக தமிழ் பேரணிக்கு ஆதரவை வழங்கியிருந்தனர்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலய முன்றலில் இருந்து யாழ். முற்றவெளி மைதானத்தை நோக்கி எழுக தமிழ் பேரணி ஆரம்பமாகியது. அதேபோன்று யாழ். பல்கலைக் கழகத்துக்கு முன்னாலிருந்தும் எழுக தமிழ் பேரணி முற்றவெளியை நோக்கி ஆரம்பமாகியது.

நல்லூரில் இருந்த ஆரம்பமாகிய எழுக தமிழ் பேரணியின் போது நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் தீலீபனின் நினைவுத் தூபியில் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் விக்கினேஸ்வரன் உள்ளிட்ட பலரும் அஞ்சலி செலுத்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து நகர்ந்த பேரணி யாழ். பலாலி வீதி கந்தர் மடத்தை வந்தடைந்தது. அதே நேரம் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகிய எழுக தமிழ் பேரணியும் கந்தர்மடத்தை வந்தடைந்தது.

இந்த இரு பேரணிகளும் ஒன்றாக இணைந்து யாழ். முற்றவெளியை வந்தடைந்தன. இந்தப் பேரணியில் சில ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர்.

பேரணி முற்றவெளி மைதானத்தை வந்தடைந்ததும் அகவணக்கம் செலுத்தப்பட்டு தமிழ்த் தாய் வாழ்த்துடன் எழுச்சிக் கூட்டம் ஆரம்பமாகியது. இதன்போது பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரான வைத்திய கலாநிதி பூ. லக்ஸ்மன் எழுக தமிழ் பிரகடனத்தை வாசித்தார்.

அதனைத் தொடர்ந்து பொது அமைப்புக்களதும் கட்சிகளதும் முக்கியஸ்தர்கள் உரையாற்றியிருந்தனர். இந்தப் பேரணியில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் பல பாகங்களிலிருந்து மட்டுமல்லாது கிழக்கு மாகாணத்திலிருந்தும் மக்கள் கலந்துகொண்டனர். இந்தப் பேரணியில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ் எழுக தமிழ் பேரணியில் பங்கேற்றோர் தமிழர் தாயகத்தில் சிங்கள குடியேற்றத்தை நிறுத்து, போர்க்குற்றவாளிகளைச் சர்வதேச நீதிமன்றில் நிறுத்து, எல்லா அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பக்கசார்பற்ற சர்வதேச விசாரணைகளை முன்னெடு, தமிழர் தாயக நிலப்பரப்பில் இராணுவ மயமாக்கலை நிறுத்து, போரினால் இடம்பெயர்ந்தவர்களைச் சொந்த இடங்களில் மீள் குடியேற்று எனக் கோஷங்களை எழுப்பினர். (ஐ–07)

## கரிசனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழ் நிகழ்வு யாழ்.முற்றவெளியில் நேற்று இடம் பெற்றது. அதில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை அரசு, சிங்கள அரசியல்வாதிகள், சர்வதேச சமூகம் போன்றோர் தமிழ் மக்களின் இன்றைய நிலைமைகளை அறிந்து கொள்ளவேண்டும். இந்த எழுச்சி மூலம் வைத்துள்ள கோரிக்கைகள் புதிய விடயங்கள் அல்ல.

இனப்பிரச்சினைக்கு அப்பால் யுத்தத்துக்குப் பிற்பாடு மிகவேகமாக இலங்கை அரசு ஒரு நிகழ்ச்சி நிரலை முன்வைத்துச் செயற்பட்டு வருகின்றது. வடக்கு மாகாணத்தில் ஆயிரம் புத்தகோவில்களைக் கட்டுவது, சிங்கள மக்களைக் குடியேற்றம் செய்வது, இவற்றைச் செய்து தமிழ் மக்கள் பெரும்பாலாக வாழக்கூடிய இடங்களில் அவர்களைச் சிறுபான்மையாக்கி, அவர்களுடைய அடையாளங்களை அகற்றித் தமிழ் மக்கள் தேசிய இனம் என்பதை மாற்றி இல்லாமல் ஆக்கும் விடயத்தை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றார்கள்.

யுத்த காலத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். ஒட்டுமொத்தமான யுத்த காலத்தில் மூன்று இலட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள். பல லட்சம் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. புராதன சின்னங்கள் அழிக்கப்பட்டுவருகின்றன. இவ்வாறாகத் தொடர்ச்சியாக அரசு தமிழினப் படுகொலையைச் செய்து வருகின்றது.

ஆகவே இந்தப் படுகொலையில் இருந்து தமிழ் மக்கள் பாதுகாக்கப்படவேண்டும். தமிழ் மண்ணைக் காப்பாற்றவேண்டும். தமிழ் மக்களின் புராதன சின்னங்கள் பாதுகாக்கப்படட்டால் மாத்திரமே தமிழ் மக்கள் இந்த மண்ணில் தேசிய இனமாக வாழமுடியும். இந்த அடிப்படையில்தான் இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இப்போது ஜனாதிபதித் தேர்தல். யாழ்ப்பாணத்துக்கு வேட்பாளர்கள் வருகின்றார்கள். சஜித் வருகின்றார். ரணில் விக்கிரமசிங்க வருகிறார். ஜே.வி.பி. வருகின்றது. பொதுஜன முன்னணியைச் சேர்ந்தவர்கள் வருகிறார்கள். எல்லோரும் தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி செய்கின்றோம் எனக் கூறுகின்றார்கள்.

ஏற்கனவே கம்ரெலிய அபிவிருத்தித் திட்டம் நடைபெறுவதாக கூறுகின்றார்கள். புதிய புதிய அபிவிருத்தி பற்றிக் கதைக்கின்றார்கள். யாழ்ப்பாணம் வந்த சஜித் தான் ஜனாதிபதியாக வந்ததும் ஆறு மாதத்திற்குள் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகக் கூறுகின்றார். ஆனால் என்ன பிரச்சினையைத் தீர்த்து வைக்கப்போகிறார், ஏதாவது திட்டங்கள் இருக்கின்றனவா என்றால் எதுவுமே இல்லை.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் மூன்று வருட காலம் தேவை எனக் கூறுகின்றார். இவ்வாறானவர்கள் தான் எம்மை நோக்கி வருகின்றார்கள்.

ஆனால் நாங்கள் ஒன்றை மட்டும் புரிந்துகொள்ளவேண்டும். எமது மண்ணில் எமது பாதுகாப்பு, எமது இனத்தின் பாதுகாப்பு, எமது இனத்தின் அடையானம், எமது மொழி 3ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்டது. எமது மொழியில் எமது கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்படவேண்டும் என்பதை நான் உட்பட அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் புரிந்து கொள்ளவேண்டும்.

வடக்கு, கிழக்கு இணைந்தது என்பது ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு பகுதி. ஆகவே அந்த இணைப்பு என்பது ஒருதலைபட்ச்சமாக தற்போது மறுதலிக்கப்பட்டுள்ளது.

எனவே அந்த இணைப்பு கொண்டுவர வேண்டிய முக்கிய பங்கு இந்திய அரசிடம் நிச்சயம் காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக இந்திய அரசு சிந்திக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க இலங்கை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை. எனவே சர்வதேச சமூகத்தின் உறுதியான பங்களிப்பு நிச்சயம் அவசியம்–என்றார். (ஐ–07)

## தாமரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாகரிகத்துக்குக் கொண்டு செல்லும் வகையிலும் தெற்காசியாவில் நவீன வசதிகளுடன்கூடிய உயரிய கோபுரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தாமரைக் கோபுரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்றுப் பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

தாமரைக் கோபுரத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வை குறிக்கும் வகையில் ஜனாதிபதியினால் நினைவு முத்திரை ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தாமரைக் கோபுரத்துக்கான இணையத்தளத்தையும் ஜனாதிபதி இதன்போது திறந்து வைத்தார்.

ஜனாதிபதிக்கும் சீன பிரதிநிதிகளுக்குமிடையே நினைவுப் பரிசில்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனெவிரத்ன, இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழுவின் தலைவர், பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் சாந்த கோட்டேகொட ஆகியோர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளும் சீன தூதுவர் உள்ளிட்ட உள்நாட்டு, வெளிநாட்டு அதிதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஒரு வார காலத்தின் பின்னர் இது பொதுமக்களின் பாவனைக்கு விடப்படும். (ஐ)

## விவசாயக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவுள்ளது.

'காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு நஞ்சற்ற உணவு உற்பத்தியில் தன்னிறைவு நோக்கி' என்னும் தொனிப்பொருளில் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கண்காட்சியைப் பார்வையிடலாம்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் வழிகாட்டலின் கீழ் விவசாயம் சார் திணைக்களங்கள் மற்றும் அமைப்புக்கள் இணைந்து இந்தக் கண்காட்சியை ஒழுங்கமைத்துள்ளன. (ஐ–07)

## கட்சிகளின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு தேர்தல் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறும்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் அதற்கான ஏற்பாடுகள் குறித்தும் இதன்போது தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் விளக்கமளிக்கவுள்ளார். (ஐ)

## தாமதமின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அழுத குழந்தையே பால் குடிக்கும் என்பார்கள். குழந்தை அழுதால்தான் தாய்க்கு அதன் பசிபற்றிபொதுவாகநினைவுவரும். அழுதால் உன்னைப் பெறலாமே என்றார் மணிவாசகப் பெருமான். இறைவன் கூட அழுபவர்களுக்கே வரம் கொடுக்கின்றான் போலும்.

நாம் இன்று எமது அழுகைகளின் காரணங்களை அரசுக்கும் ஐக்கிய நாட்டு அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் உரக்கச் சொல்லவே இங்கு கூடியுள்ளோம். இன்று நாம் அழமாட்டோம். ஆனால் ஆர்ப்பரிப்போம். அகிலத்தை எம் பக்கம் ஈர்க்க வைப்போம்.

நான் இங்கு தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் என்ற முறையில் பேசுகின்றேன். என் கட்சி சார்பில் பேச எவரும் அழைக்கப்பட மாட்டார்கள். உங்கள் பலரின் வேண்டுகோளுக்கு அமைய நானும் உங்கள் மத்தியில் இருந்துதான் பேச அழைக்கப்பட்டுள்ளேன்.

இலங்கையின் வரலாற்றுக் காலத்திற்கு முதலிலிருந்தே தமிழ் மக்கள், தம்மைத் தாமே ஆண்டு வந்துகொண்டிருந்த நிலைமை 16ஆம் நூற்றாண்டில் கொலனியாதிக்கம் ஏற்படும் வரை நீடித்திருந்தது. பின்னர் சுமார் 450 வருட காலம் வெளிநாட்டவரின் கொலனி ஆட்சி நடைபெற்றது.

1948 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களிடம் இருந்து சுதந்திரம் கிடைத்தபோது ஒற்றையாட்சி நிர்வாக அலகின் கீழ் தமிழ் மக்களின் ஆட்சி அதிகாரங்கள் பறிபோயிருந்தன. இது சுதந்திரத்துக்கு முற்பட்ட வரலாறு.

பின்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள், எமது பிரச்சினைகளை நாமே தீர்க்கும், எமது பிரதேசங்களை நாமே அபிவிருத்தி செய்யும், எமது பாதுகாப்பை நாமே உறுதிசெய்யும் அதிகாரம் அற்ற எமது நிலமையைப்பயன்படுத்திஎமது இனத்தை 'இன அழிப்புக்கு உட்படுத்தி எமது தாயகமான வடக்கு – கிழக்கை ஆக்கிரமித்து, தமிழ் தேசியத்தை அழிக்கும் பல்வேறுபட்ட உபாயங்களை, சட்டங்களைப் பயன்படுத்தியும் சட்டத்துக்கு புறம்பாகவும் மேற்கொண்டார்கள். அவற்றுக்கு எதிராக தமிழ் மக்கள் சுமார் 30 வருடகாலம் அகிம்சை வழியிலும் வேறு வழியின்றி மேலும் ஒரு 30 வருடகாலம் ஆயுத வழியிலும் போராடியமை சுதந்திரத்துக்குப் பிற்பட்ட வரலாறு.

இனவழிப்பு பற்றிய ஐக்கிய நாடுகளின் ஒத்த உடன்படிக்கையானது 09.12.1948லேயே இன அழிப்புக்கு வரையறை கொடுத்திருந்தது. அதனை இலங்கை 1950 இல் ஏற்றுக்கொண்டிருந்தது –

அவையாவன:

ஒரு மக்கட் கூட்டத்தின் உறுப்பினர்களைக் கொல்லுதல்.

ஒரு மக்கட் கூட்டத்தின் உறுப்பினர்களுக்கு மிக அபாயகரமான உடல் மற்றும் மனோரீதியான பாதிப்பை ஏற்படுத்துதல்.

வேண்டுமென்றே ஒரு மக்கட் கூட்ட உறுப்பினரின்பகுதியானதோ முழுமையானதோ பௌதிக அழிவைக்கொண்டுவரும்நடவடிக்கைகளில் ஈடுபடல்.

ஒரு மக்கட் கூட்டத்தினுள் பிள்ளைகள் பிறக்காது செய்ய நடவடிக்கைகளில் ஈடுபடல். இனப் பெருக்க ஆற்றலை நீக்குவது இவற்றுள் ஒன்று.

ஒரு மக்கட் கூட்ட குழந்தைகளை இன்னொரு மக்கட் கூட்டத்திற்கு பலாத்காரமாக மாற்றுதல் ஆகியனவே அவை.

ஆகவே இன அழிப்பு என்பது வெறும் கொல்லுதலைக் குறிக்க மாட்டாது. உடல், மனோரீதியான பாதிப்பு, பௌதிக அழிப்பு, இனப் பெருக்க ஆற்றலை பலாத்காரமாக நீக்குதல், குழந்தைகளைப் பலாத்காரமாக தமது குடும்பங்களில் இருந்து மாற்றுதல் போன்ற பலவும் இன அழிப்பே.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்ததற்கும் 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைவதற்கும் இடைப்பட்ட காலத்தில் எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வடிவங்களிலான இன அழிப்பு நடவடிக்கைகள் மூலம் பெரும் அளவில் எமது பாரம்பரிய நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

சிங்களக் குடியேற்றங்கள் மூலம் வடக்கு கிழக்கின் குடிசன பரம்பலில் திட்டமிட்ட மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான எமது மக்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். ஆயிரக்கணக்கான எமது பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். எமது பாரம்பரிய வரலாற்று, தொல்லியல், கலாசாரச் சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இலட்சக்கணக்கான எமது மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்கின்றார்கள். பெருமளவில் எமது சொத்துக்கள் அழிக்கப்பட்டு பொருளாதாரம் சிதைக்கப்பட்டுள்ளது.

காலத்துக்கு காலம் ஏற்பட்ட வெளிநாட்டு தலையீடுகளாலோ, சமரச முயற்சிகளாலோ மனித குலத்துக்கு எதிரான இந்தக் குற்றங்களைத்தடுக்க முடியவில்லை. உலகின் கண்களுக்கு முன்பாக கொடூரமானதொரு சாட்சிகளில்லாச் சமர் நடத்தப்பட்டு மனித துன்பியல்நிகழ்வொன்றுநிகழ்த்தப்பட்டு 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னணியில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை சர்வதேச ரீதியான ஒரு பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் எமக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகள் இங்கு தொடர்கின்றன.

வடக்கு – கிழக்கில் எமது இனத்தின் இருப்பையும் அடையாளத்தையும் இல்லாமல் செய்யும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு இராணுவம், வன இலாகா, வன ஜீவராசிகள் திணைக்களம், வீடமைப்பு அதிகார சபை, மகாவலி அதிகார சபை, தொல்பொருள் ஆய்வுத்திணைக்களம் போன்ற அரச இயந்திரத்தை இன்று அரசு முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றது. அரசு தனதுஎல்லாதிணைக்களங்களையும், அதிகார சபைகளையும் மிகவும் நுட்பமான முறையில் எமக்கெதிராகப்பயன்படுத்திவருகின்றது.

இந்த அநியாயங்களையும் அடக்குமுறைகளையும் நாம் இனியும் அனுமதிக்க முடியாது. அவ்வாறானஅரசநடவடிக்கைகளுக்கு நாங்கள்ஒருபோதும்அடிபணியப் போவதில்லை என்று கூறியே இன்றைய 'எழுக தமிழ் நிகழ்வில் நாம் கிளர்ந்து நிற்கின்றோம்.

நாம் இன்று யாழ் முற்றவெளியில் திரண்டு இருந்து உரிமைக் குரல் எழுப்பும் அதேவேளை எமது புலம் பெயர் உறவுகள் பல்வேறு நாடுகளிலும் சாமாந்திரமாகஎழுகதமிழ்போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். எமது தமிழ் நாட்டு உறவுகள் எமது போராட்டங்களுக்கு தமது ஆதரவை வெளிப்படையாகத் தெரியப்படுத்தி வருகின்றார்கள்.

தமிழ் மக்கள் வடக்கு – கிழக்கு இணைந்த தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன்வாழும் வகையில்இந்தியாதீர்வொன்றினை கொண்டுவரும் என்று எமது மக்கள் திடமாக நம்புகின்றார்கள். இலங்கை இனப் பிரச்சினை தொடர்பில் இந்தியா இதுவரை கடைப்பிடித்துவரும்மென்போக்கு நிலையில் இருந்து விலகி தமிழ் மக்களின் இருப்பையும் அடையாளத்தையும்பாதுகாக்கும் வகையில் துணிச்சலான நடவடிக்கைகளைத் தாமதம் இன்றி எடுக்க வேண்டும் என்று இந்த எழுக தமிழ் மூலம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தமதுஉரிமைகளைவலியுறுத்தி எமது மக்கள் மேற்கொள்ளும் இந்தப்போராட்டத்தின் முக்கியத்துவத்தை எவரும் குறைத்து மதிப்பிடவோ அல்லது புறந்தள்ளிவிடவோ முடியாது. எமதுகோரிக்கைகள்யாவையென இங்கு இணைத்தலைவரால் வாசிக்கப்பட்டன.

ஆறு விடயங்களுக்கு மேலதிகமாக இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டமாக அமைய வேண்டும்.

அடுத்து எமது பகுதிகளில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு தென்இலங்கையில்இருப்பவர்களை தயவுசெய்து நியமிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

போரால் சின்னாபின்னமாகிப்போயுள்ள எமது பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்பி நாமும் உங்களைப்போன்று வளமான ஒரு வாழ்வில் ஈடுபடும் வகையில் ஓர்இடைக்காலசிறப்புப்பொருளாதார கட்டமைப்பைசர்வதேசநாடுகளுடன் சேர்ந்துஉருவாக்குங்கள் என்றும் மத்தியஅரசுகளிடம்கேட்கின்றோம்.

எம்மை நாமே ஆட்சிசெய்து சுய கௌரவத்துடன் வாழ்வதற்கு எமக்கு இருக்கும் சுய நிர்ணய உரிமையினைஏற்றுக்கொள்ளுங்கள், அங்கீகரியுங்கள் என்று எமது சிங்கள, முஸ்லிம் சகோதரர்களிடம்கேட்டுக்கொள்கின்றோம். எமது மக்கள் என்ன தீர்வினை விரும்புகின்றார்கள் என்பதை அவர்களின் கருத்தை அறியும் ஒரு பொது வாக்கெடுப்பை எமது மக்கள் மத்தியில் நடத்தி முடிவு செய்யுங்கள் என்று அரசாங்கத்தைக் கேட்டு வைக்கின்றோம்.

சிங்கள சகோதரரும் தமிழ் மக்களும் இந்த நாட்டில் காலம் காலமாக உள்ளூர் சுதேச மக்களாக வாழ்ந்து வருபவர்கள். எமது சகோதர இனமான உங்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் நாம் என்றைக்கும் தடையாக இருந்ததில்லை. நீங்களும் வாழவேண்டும், நாமும் வாழவேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம். நீங்கள் தற்போதுஎமக்குஎதிராகமேற்கொண்டு வரும் எல்லா செயற்பாடுகளையும் நிறுத்தி எமது சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

அதேவேளை சர்வதேச சமூகத்திடம்நாம்வேண்டிக்கொள்வது யாதெனில் உலகத்தின் மூத்த இனங்களில் ஒன்றான எமது தமிழ் இனத்தின் இருப்பும் அடையாளமும் இலங்கைத் தீவில் பல தசாப்த கால இன முரண்பாடு காரணமாக இல்லாமல் போகும் நிலைமை ஏற்பட்டிருப்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளுங்கள். ஆகவே தயவுசெய்து சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், கோட்பாடுகள் மற்றும் உடன்படிக்கைகளின்அடிப்படையில்உங்களுக்கு இருக்கும் தார்மீக கடப்பாட்டை உணர்ந்து செயற்படுங்கள் என்று நாம்உங்களிடம்கோருகின்றோம்.

இறுதிப்போரில்மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபையினூடாக ஒரு பொறுப்பு கூறல் பொறிமுறைக்கு உட்படுத்த சர்வதேச நாடுகள் மேற்கொண்டஎல்லாமுயற்சிகளும் தோல்வி கண்டுவிட்டன. நல்லெண்ண அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீது விதித்திருந்த ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை நீக்கியமை எந்தவிதத்திலும் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை அரசை மாற்றவில்லை என்பதை உலகம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இறுதிப் போரில் மிகமோசமான போர்க்குற்றம் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தார் என சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளால் குற்றம் சுமத்தப்பட்டுள்ள லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவை இலங்கை இராணுவத்தின் தளபதியாக நியமித்துள்ளமை எந்த அளவுக்கு இலங்கை உலக அபிப்பிராயங்களை கணக்கில் எடுக்கின்றது என்பதை எடுத்தியம்பும்.

அரசு சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றி தமிழ் மக்களையும் ஏமாற்றி இன அழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. எந்த அளவுக்கு நாம் எமது மக்களையும், நிலங்களையும், பொருளாதாரத்தையும் இழந்திருக்கின்றோம், இழந்துவருகின்றோம் என்பதை நாம்நன்குஉணர்ந்தவர்களாகவே சர்வதேசநாடுகளின்உடனடியான தலையீட்டை இந்த எழுக தமிழ் நிகழ்வின் ஊடாகக் கோரி நிற்கின்றோம். எமது மக்கள் தமது அன்றாட நிகழ்வுகளை எல்லாம் கைவிட்டு வந்து, கடைகளை அடைத்து வைத்துவிட்டு வந்து இன்று இந்த எழுகதமிழ்நிகழ்வின் ஊடாக மேற்கொள்ளும் சாத்வீக போராட்டத்தின் செய்தியினை புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகின்றோம்.

இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசென்று கையாளுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து சர்வதேச சமூகம் கவனம்செலுத்தவேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை ஒரு விசேட பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என்றும் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்தும் வகையிலும் கண்காணிக்கும் வகையிலும் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயம் வடக்கு கிழக்கில் தனது அலுவலகங்களை திறக்க வேண்டும் என்றும் இந்த எழுக தமிழ் நிகழ்வின் மூலம் நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இலங்கை தீவில் ஒரு நிலையான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பக் கூடிய தீர்வு தொடர்பில் தமிழ் மக்களின்கருத்தைஅறியும்வகையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான முயற்சிகளையும் சர்வதேச சமூகம், சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கோட்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளவேண்டும்.

அரசுக்கு ஒன்றை இறுதியாக கூறிவைக்கின்றேன். தமிழ்ப் பயங்கரவாதிகள்என்றுஎம்மிடையே எவரும் இல்லை. அரச பயங்கரவாதத்தால்பெரிதும் பாதிக்கப்பட்டவர்களேஎம்மிடையேஉள்ளார்கள். எம்மக்களைமத அடிப்படைவாதப் பயங்கரவாதிகள் என்று அடையாளப்படுத்தப்படும் நபர்களுடன் முடிச்சுப் போடாதீர்கள். எமது இளைஞர்கள், யுவதிகள் மற்றோர் யாவரும் எமது விடுதலைக்காகப் போராடினார்கள். அரசபயங்கரவாதத்திற்கு ஈடுகொடுக்க ஆயுதம் ஏந்தியவர்களே எமது மக்கள். அவர்களுக்குப் பயங்கரவாதிகள் என்ற முத்திரை குத்தி அவர்களின் சுதந்திர வேட்கையைக் கொச்சைப்படுத்தியுள்ளன தொடர்ந்து வந்த மத்திய அரசுகள். அவ்வாறு தொடர்ந்து செய்வதைத் தவிருங்கள் என்று அரசுகளுக்குக் கூறி வைக்கின்றேன்.

இளையோர்கள் ஆயுதமேந்தக்காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் தொடர்ந்து வந்த சிங்களப் பெரும்பான்மை அரசுகளே. இவற்றை எல்லாம் அலசி ஆராய்ந்து உண்மையை எமது சிங்களச் சகோதர, சகோதரிகள் அறிந்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. சரித்திரத்தைத் திரித்து, உண்மையை மழுங்கடிக்கப் பண்ணி, பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்று எம் மக்கள் மீது அநியாயமாகக் குற்றம் சுமத்தி, சட்டத்திற்குப் புறம்பான சட்டங்கள் மூலம் தண்டித்த காலங்களை வெட்கத்துடன் நோக்க வேண்டிய தருணம் தற்போது எமது சிங்கள சகோதர, சகோதரிகளுக்கு வந்துள்ளது. இதுவரை காலமும் நடாத்தப்பட்ட பொய் சார்ந்த அரசியல் நடவடிக்கைகளை உணர்ந்து சகோதரர்களாக தமிழ் மக்களுக்கு விடிவு காலம் ஏற்படுத்த எமது சிங்கள சகோதர, சகோதரிகள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கின்றேன் – என்றுள்ளது. (ஐ)

## பேரணியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பங்கேற்றார். அவருடன் கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவரை இந்தப் பேரணியில் பார்க்க முடியும் என்று நம்புகிறார் என்றும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்தப் பேரணியில் பங்கேற்காத நிலையில் கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் இதில் பங்கேற்றார்.

தமிழ் மக்கள் பேரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காதபோதும், அனைத்துக் கட்சிகளையும், அமைப்புகளையும், அரசியல் சார்பின்றி இந்தப் பேரணியில் பங்கேற்குமாறு தமிழ் மக்கள் பேரவை சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. (ஐ–07)

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுகளை அவர் அறிவிக்கவுள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் இந்தச் செய்தியாளர் மாநாடு நடக்கவுள்ளது.

முன்னதாக நேற்றுக் காலை பிரதமர் ரணிலுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிய சஜித், ஜனாதிபதி வேட்பாளராக தாம் போட்டியிட தயாரென்றும் அது தொடர்பில் கட்சிக்குள் இரகசிய வாக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறும் கேட்டிருந்தார்.

அதேசமயம் இன்று அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின்னர் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பிரதமர் ரணிலைச் சந்தித்து சஜித்தை வேட்பாளராக நியமிக்கக் கோரும் கடிதமொன்றைக் கையளிக்கவுள்ளனர் என அறியமுடிந்தது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ‘எழுக தமிழ்’ நிகழ்வுக்கு தமிழ் மக்களின் பிரதிபலிப்பு

‘மலையை கெல்லி எலியைப் பிடித்த கதை’யாக முடிந்திருக்கின்றது ‘எழுக தமிழ்’ நிகழ்வு.

முன்னைய ‘எழுகதமிழ்’ நிகழ்வுகளோடு ஒப்பிடுகையில் நேற்று நடந்தது ஒரு பின்னடைவுதான் என்பதை நடுநிலையாளர்கள் யாவரும் ஏற்பர்.

வடக்கு மாகாண முன்னாள் முதல்வரும், ‘எழுக தமிழ்’ நிகழ்வை நடத்திய தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் நேற்றுத் தமது உரையில் கூறியபடி இந்நிகழ்வுக்கு மக்கள் நூற்றுக் கணக்கில் மட்டுமே திரண்டமைக்கு மழையும் ஒரு காரணம்தான்.

ஆனால், அதுவே முழுக் காரணமாகி விடாது.

‘எழுக தமிழ்’ நிகழ்வுக்கு ஊடகங்கள் மூலம் கொடுக்கப்பட்ட எடுப்புக்கும், நடப்புக்கும் இடையில் பெரும் வேறுபாடு காணப்படுகின்றது. மக்கள் நிகழ்வுக்கு வராமல் விடுப்புப் பார்ப்பதோடு அடங்கி விட்டனர்.

நீதியரசர் விக்னேஸ்வரனும், தமிழ் மக்கள் பேரவையினரும் நடந்தவற்றை விலாவாரியாக அறுவை செய்து பார்க்க வேண்டிய தேவை – கட்டாயம் – ஏற்பட்டிருப்பதாக நினைக்கின்றோம்.

பேரவையின் பல உறுப்பினர்கள், பல பிரிவினர் இந்த எழுக தமிழுக்காகக் கடுமையாக உழைத்தனர். மாவட்டங்கள் ரீதியாக சளைக்காமல் – பயணித்து தொடர்பாடல்களையும், உசாவல்களையும், கலந்துரையாடல்களையும் முன்னெடுத்தனர்.

எழுக தமிழுக்கான பிரசாரக் களப்பணி மும்முரமாக முன்னெடுக்கப்பட்டன.

பல அமைப்புக்கள், பிரமுகர்கள் பெயரில் எல்லாம் வரிசையாக ஆதரவு அறிவிப்புகள், அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் எல்லாம் வெளியிடப்பட்டன.

இங்கு ‘எழுக தமிழ்’ எழுச்சிக்குக் கட்டியங் கூறுமாற் போல புலம்பெயர் தேசங்களில் கூட ஆயத்த எழுச்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

ஆனால், யாழ்ப்பாணத்தில் எழுச்சிக் கூட்டத்துக்கு ஒரு சில ஆயிரங்களில்தான் மக்கள் சமூகம் தந்தனர்.

அதிலும் கணிசமானோர் வவுனியாவிலிருந்து சிவசக்தி ஆனந்தன் எம்.பியின் ஏற்பாட்டில் வந்து சேர்ந்த ஆர்வலர்கள். அவர்களும் இல்லாவிட்டால் நிலைமை இன்னும் மோசமாக வெறிச்சோடிப் போயிருந்திருக்கும்.

இந்த ‘எழுகதமிழ்’ நிகழ்வு தமது தமிழ் மக்கள் கூட்டணியினுடையதல்ல என்றும், கட்சி சார்பற்று தமிழ்ப் பொதுமக்களின் நிகழ்வாக அது நடத்தப்படுகின்றது என்றும் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் முற்கூட்டியே அறிவித்திருந்த போதிலும், இந்த ‘எழுக தமிழ்’ நிகழ்வு போதிய மக்கள் பிரசன்னமின்றி சோபையிழந்தமை அவரது அரசியல் செல்வாக்குக்கு பின்னாலும் ஒரு கேள்விக்குறியைப் போட்டே சென்றிருக்கின்றது என்பதை நாம் மறுக்க முடியாது.

இத்தகைய மக்கள் எழுச்சிக்கு அழைப்பு விடுப்போர் ஊடகங்கள் தம் கைகளில் இருக்கின்றன என்று நினைத்துக் கொண்டு விட்டேந்தித்தனமாக நடந்து கொள்ளக் கூடாது.

எடுத்த எடுப்பில் தம்பாட்டில் ‘எழுக தமிழ்’ தினத்தைக் கடையடைப்பு, ஹர்த்தால் என்று அறிவித்தமையும் கூட முட்டாள்தனமான செயற்பாடுதான். அப்படி அறிவித்து, மக்களைப் பலவந்தமாக வீடுகளுக்குள் முடக்கி இப்போது தங்கள் கைகளையே தாங்களே சுட்டுக் கொண்டு, முழுசுகின்றார்கள் அவர்கள்.

‘எழுக தமிழ்’ பேரணிக்காகக் காலையில் மூன்று மணி நேரம் வர்த்த நிலையங்களைப் பூட்டி ஒத்துழையுங்கள் என்று வர்த்தகர்களைக் கேட்டிருந்தால் – நீண்ட விடுமுறைக்குப் பின்னர் நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாண நகரம் சற்றுக் கலகலப்பாக இருந்திருக்கும். பேரணிக்கும் கொஞ்சம் கூடுதலாக மக்களும் வந்திருப்பரோ, என்னவோ? முடங்கிக் கிடந்த யாழ் நகரில் சில ஆயிரம் பேர் மட்டும் பரந்த முற்றவெளியில் நின்றால் சனக்கூட்டம் எப்படியிருக்கும் என்பது கற்பனைப் பண்ணிப் பார்க்கக் கூடியதுதான்.

இன்னொரு விடயம். நீதியரசர் விக்னேஸ்வரன் தரப்பினால் முன்னெடுக்கப்பட்ட இந்த எழுச்சிப் பேரணி நிகழ்வுக்குத் தமது முழு ஆதரவைத் தரவில்லையாயினும், அதற்கு எதிரான செயற்பாடுகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட பிற தமிழ்க் கட்சிகள் அதிகம் ஈடுபடவில்லை என்பதும் குறிப்பிட வேண்டிய விடயம்.

இந்தப் பின்புலத்தில், மக்களின் இந்தப் பிரதிபலிப்பை சரியாக அறுவை செய்து, ஆய்ந்து பார்த்து, அதன் மூலம் தமிழ் மக்கள் கூற முற்படும் செய்தியை நீதியரசர் விக்னேஸ்வரனும், அவருக்கு பின்னால் நிற்பவர்களும் புரிந்துகொள்ள முற்பட வேண்டும்.

புரிந்து கொண்டு அதற்கேற்ப தமது அரசியல் செல்நெறியை செழுமைப்படுத்த அவர்கள் முன்வரவேண்டும். அது காலத்தின் கட்டாயமாகும்.

# யார் வெற்றி பெறுகின்றார் என்பதை விட யாரைத் தோற்கடிப்பது என்பதே முக்கியம்!

## கூறுகிறார் கூட்டமைப்பு எம்.பி. சிறிநேசன்



மட்டக்களப்பு, செப். 17

யார் வெற்றி பெறுகிறார் என்பது முக்கியமல்ல. யார் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதே முக்கியம் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பகுதியில் நடந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தோற்கடிக்க வேண்டியவரை நாங்கள் தோற்கடித்துத்தான் ஆக வேண்டும் எனவும் மக்கள் ஆணைக்கு ஏற்றவாறே செயற்பட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி எமது கட்சியின் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அவரின் போக்கு ஓரளவு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இலங்கையில் இருக்கின்ற தலைவர்களை ஒப்பிடுகின்றபோது எவரும் உயர்ந்த நிலையில் இல்லாத போதிலும் உள்ளவற்றில் எங்களுக்கு ஓரளவு நல்லது செய்யக்கூடியவர் யார்? எந்தக்கட்சி செய்கின்றது என்பதை அடையாளம் கண்டு அதற்கு நாம் ஆதரவு வழங்கலாமே தவிர அது நிரந்தரமான உதவியாக இருக்க முடியாது.

நாங்கள் இந்த ஆட்சிக்கு முட்டுக்கொடுக்கவில்லை. மோசமான ஓர் ஆட்சி ஏற்படுவதைத் தடுப்பதற்காக மக்களுக்குச் சுதந்திரமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக இந்த ஆதரவைக் கொடுக்கின்றோம். இதனை விடச் சிறப்பான ஓர் ஆட்சியை மற்றவர்கள் தருவார்கள் என்று சொன்னால் நாங்கள் வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்கின்றோம். அதன் பின்னர் கடத்தல் நடந்தால், காணாமல்ஆக்கப்படுதல் நடந்தால், பழிவாங்கல் நடந்தால் நாங்கள் பொறுப்புக்கூற முடியாது.

தற்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான மணி அடித்துவிட்டது. தற்போது இரண்டு வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளார்கள். ஒருவர் கோட்டபாய. இரண்டாமவர் அநுரகுமார திசாநாயக்க. ஐக்கிய தேசியக் கட்சியில் கேள்விக்குறி நிலவுகின்றது. இந்த மூன்று வேட்பாளர்களையும் மதிப்பீடு செய்யவேண்டிய தேவை இருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாங்கள் வாக்களிக்கலாமா என்பது பற்றி ஆழமாகச் சிந்திக்கவேண்டிய தேவை இருக்கின்றது. இவர் எங்களுக்கு என்ன தீர்வைத் தரப்போகின்றார்? கடந்த காலத்தில் அவர் என்ன செய்தார் என்பதை நாங்கள் ஆழமாகச் சிந்திக்கவேண்டிய தேவை இருக்கின்றது. அவருக்கு நாங்கள் வாக்களிக்கலாம் எனச் சொன்னால் அதில் வடி கட்டிய சுயநலவாதத்தையும் முட்டாள்தனத்தையும் தவிர வேறெதுவும் இருக்க முடியாது.

1990ஆம் ஆண்டிற்குப் பிறகு யுத்த காலத்தில் இங்கிருந்து மறைந்து இந்தியா சென்று எந்த இழப்புமின்றித் திரும்பிவந்த வரதராஜப் பெருமாள். இப்போது புதியதொரு அரசியல் கடையைத் திறந்திருக்கின்றார். கோட்டாவுக்கு ஆதரவளிக்குமாறு சொல்கிறார். டக்ளஸ் தேவானந்தா, கருணா போன்றோரும் சொல்கின்றனர். இன்னும் பலர் சொல்ல இருப்பார்கள். கோட்டவுக்கு வாக்களிக்குமாறு நாங்கள் சொன்னால் கூட தமிழ் மக்கள் அதை ஏற்க மாட்டீர்கள். நாங்கள் சொல்லவும் மாட்டோம்.

மக்களுக்கு மாறாக நாங்கள் முடிவெடுக்க முடியாது. மக்கள் சொல்லும் காத்திரமான, புத்திசாலித்தனமான முடிவுகள் எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தாத முடிவுகளாக இருக்கின்றபோது அந்த முடிவுகளுக்கு நாங்கள் செல்லவேண்டிய நிலைமையேற்படுகின்றது – என்றார். (ஐ)

# பலாலி விமான நிலையக் கட்டுமானப் பணிகளை 10 ஆம் திகதிக்கு முன் முடிக்க அரசு நடவடிக்கை



யாழ்ப்பாணம், செப்.17

இலங்கையின் மூன்றாவது அனைத்துலக விமான நிலையமாக அறிவிக்கப்பட்டுள்ள, பலாலி விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகள், வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என நெடுஞ்சாலை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

பலாலி விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவாக்கப் பணிகளை நேற்று முன்தினம் பார்வையிட்ட பின்னரே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பலாலி விமான நிலைய ஓடுபாதையை விரிவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை, தமக்கு வழங்கப்பட்ட 70 வீத பணிகளை நிறைவு செய்துள்ளது.

விமான நிலையத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வரும், விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தமது பணிகளில் 55 வீதத்தை நிறைவு செய்திருக்கிறது.

வரும் ஒக்ரோபர் 16 அல்லது அதனை அண்டிய நாளில் பலாலி விமான நிலையத்தில் இருந்து, அனைத்துலக விமான சேவைகளை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எனவே, ஒக்ரோபர் 10 ஆம் திகதிக்கு முன்னர் கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**நாளை** 18.09.2019 புதன்கிழமை
நட்சத்திரம்: அச்சுவினி காலை 6.10 வரை
திதி : சதுர்த்தி பி.ப 4.20 வரை
இராகுகாலம் : 12.03 – 1.33
சுப நேரம் : 4.33 – 6.03
மஹாபரணி

காலைக்கதிர்
Kalaikathir



# ஆணைக்குழு முன் ஆஜராகி சாட்சியமளித்தார் பிரதமர்

கொழும்பு, செப். 17

தற்போதைய அரசின் ஊழல் மற்றும் மோசடிகளை ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. மீண்டும் அவரை பிற்பகல் ஆஜராகு மாறு ஆணைக்குழு கேட்டது. அதன்படி பிற்பகல் 1.30 மணிக்கும் அவர் ஆஜராகிச் சாட்சியமளித்தார்.



# மக்கள் வங்கிக் கிளையில் தீ!

யாழ்ப்பாணம், செப். 16

வல்வெட்டித்துறையில் உள்ள மக்கள் வங்கி கிளையில் நேற்றுமுன்தினம் நண்பகல், தீவிபத்து ஏற்பட்ட தில், வங்கியின் மின்பிறப்பாக்கி இயந் திரப் பகுதி முற்றாகத் தீக்கிரையாகியது.

விரைந்து சென்ற தீயணைப்புப் பிரிவினர், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தீ விபத்தால், சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன.

மின் ஒழுக்கு காரணமாகவே இத் தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரிவித்த வல்வெட்டித்துறைப் பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் கூறினர். (ஐ)

## நவம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடத்துவதற்குத் தீர்மானித்தி ருப்பதாகத் தெரியவந்தது.

காலம்தாமதிக்காமல் – இயன்ற விரைவில் – முற்கூட்டியே – தேர் தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணயம் தீர்மானித்திருப்பதாக வும் –

நவம்பர் 23 வரை பின்னே செல்லவிடாமல், அதற்கு முந்திய திகதி ஒன்றில் தேர்தலை நடத்தி முடிப்பதற்குத் தேர்தல் ஆணை யம் தீர்மானிதிருப்பதாகவும் – கூறப்பட்டது.

எதிர்வரும்சனிக்கிழமையன்று 21 ஆம் திகதி இந்தத் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப் பைத் தேர்தல் ஆணையம் விடுக் கும் என்றும் தெரிகின்றது.

அதற்குப் பின்னர் 16 தொடக் கம் 21 நாள்கள் வரை வேட்பு மனுக்கள் ஏற்கப்படும் நாளகள் என்பதால்பெரும்பாலும்ஒக்ரோபர் 7ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினங் களாக அறிவிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள் ளப்பட்டு 4வாரங்கள் முதல் 6 வாரங்கள் வரையான காலத்தில் வாக்களிப்பு நடத்தப்பட வேண்டும் என்பது சட்டவிதி.

ஆகவே, இரண்டுக்கும் நடு வில் சரியாக ஐந்து வார முடிவில், நவம்பர் 16ஆம் திகதி ஜனாதி பதித் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(முன்னர் வந்த செய்தி 9 ஆம் பக்கத்தில்)

## முடங்கியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடத்தப்படவுள்ளது.

இதற்காக வடக்கு முழுவதும் கடையடைப்புக்கு அழைப்பு விடுக் கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் நகரம் மற்றும் சில பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட் டமையுடன், போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறவில்லை.

இ.போ.ச. தொழிற்சங்கங்கள் நாடுமுழுவதும் பணிப்புறக்கணிப் பில் ஈடுபடுகின்றன. அதனால் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலை யம் வெறிச்சோடிப் போனது.

யாழ்ப்பாணம் நகரப் பாட சாலைகளுக்குச் சென்ற மாண வர்கள் திருப்பிச் சென்றனர்.

பஸ் சேவை இல்லாததால் அரச ஊழியர்கள், வைத்திய சாலைகளுக்குச் சிகிச்சைக்காகச் சென்றோர் பஸ் தரிப்பிடங்களில் கூடி நின்றனர். (ஐ–07)

# பலாலி விமானத் தள விஸ்தரிப்புக்கு காணிகள் சுவீகரிப்பதை ஏற்க முடியாது!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், செப். 16

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காகப் பொது மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

வடக்கு மாகாணத்தில் ஒன்றரை லட்சம் இராணுவம் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் இருக் கின்றார்கள். வேறு இடங்களில் இருக்கக்கூடிய இராணுவத்தினரைப் பலாலியில் குடியேற்றுவதற் காக எங்களுக்கு 1000 ஏக்கர் காணி தேவை என்று சொல்வது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல.

யுத்தம் முடிந்து 10 வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் அதற்குப் பின்னர் ஆயுத ரீதியாக எந்த வொரு செயற்பாடுஇல்லாத நிலையில் தொடர்ந்தும் லட்சக்கணக்கான இராணுவத்தை வடக்கில் பேணியவாறு தமிழ் மக்களுடைய காணி களை இராணுவ வசம் வைத்துக்கொண்டு இரா ணுவக் குடியிருப்புக்களை உருவாக்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.


ஆகவே வடக்கு ஆளுநர் புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் காணிகள் மக்கள் நெடுங்கால மாக விவசாயம் செய்து வாழ்ந்து வந்த பிரதே சங்கள். ஆகவே இது இராணுவத்துக்குச் சொந் தமான நிலங்கள் அல்ல.

பலாலியில் பிரமாண்டமான விமான நிலையம் எமக்கு இப்போது தேவையில்லை என்று பலரால் கூறப்படுகின்றது. பிரமாண்டமாக விமான நிலை யத்தை அமைக்கும் சூழல் வரும்போது காணி களை சுவீகரிப்பது என்பது வேறு விடயம். இன்று அந்த மக்களிடம் காணிகளைக் கையளிக்க வேண்டியதுதான் முக்கியமானது.

எனவே இராணுவத்துக்கு ஆயிரம் ஏக்கர், விமான நிலையத்துக்கு ஆயிரம் ஏக்கர் என்று மக்களின் காணிகளை சுவீகரிப்பது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது – என்றார். (ஐ)

# எழுக தமிழுக்கு ஆதரவாக முல்லையிலும் கடையடைப்பு!





முல்லைத்தீவு, செப்.17

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற எழுக தமிழ் நிகழ்வுக்கு ஆதரவு தெரி வித்து முல்லைத்தீவிலும் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நேற்றையதினம் யாழ்ப்பா ணத்தில் எழுக தமிழ் பேரணி இடம் பெற்றது.

இதற்காக நேற்றைய தினம் வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி பூரண கடையடைப்பு மேற்கொள்ளு மாறும் இந்த போராட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வர்த்தக நிலையங்கள், சந்தைகள், கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டு பூரண ஆதரவு வழங்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.







# சு.க. உறுப்புரிமையிலிருந்து எம்மை நீக்கிவிட முடியாது!

## சட்ட ரீதியாக எதிர்கொள்வேன் என்கிறார் எஸ்.பி.



கொழும்பு, செப். 17

மத்திய குழுவின் அனுமதியின்றி ஒருவரின் கட்சி உறுப்புரிமையை நீக்க முடியாது என்றும், சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டமையைச் சட்டரீதியாக எதிர்க்கொள்ளத் தீர்மானித்துள்ளார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அந்தக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திசாநாயக்க, டிலான் பெரேரா, ஏ.எச்.எம்.பௌசி, லக்ஸ்மன் யாப்பா, விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர் என சு.க. பொதுச் செயலாளர் அறிவித்திருந்தார்.

விரைவில் மத்திய செயற்குழு கூடி அவர்கள் தொடர்பில் இறுதி முடிவெடுக்ககும் எனவும், சிலவேளை கட்சி உறுப்புரிமை நீங்கியவர்களது நாடாளுமன்றப் பதவியும் கேள்விக்குறியாகலாமெனவும் தயாசிறி ஜயசேகர அறிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட எஸ்.பி.திசாநாயக்க, எம்மைக் கட்சியிலிருந்து நீக்க முடியாது. கட்சியின் செயற்பாட்டிலிருந்து எம்மைத் தடை செய்ய முடியுமே ஒழிய உறுப்புரிமையை இல்லாது செய்ய முடியாது.

அதுவும் இந்த அதிகாரம் கட்சித்தலைவருக்கு மட்டுமே உள்ளது. மாறாக, இதற்கான அதிகாரங்கள் பொதுச் செயலாளருக்கு கிடையாது. அவ்வாறு நீக்க வேண்டுமெனில், மத்திய செயற்குழுவின் அனுமதி அதற்கு அத்தியாவசியமாக இருக்கிறது. ஆனால், எமக்கு தெரிந்தவகையில் அண்மைக் காலமாக மத்தியக் குழுக் கூட்டம் நடைபெறவில்லை. இறுதியாக நடைபெற்ற கூட்டத்தில்கூட, எமது தரப்பு நியாயங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக கலந்துரையாடப்படவில்லை.

நாம் எமது தன்னிலை விளக்கத்தை மட்டும்தான் இதுவரை குறிப்பிட்டுள்ளோம். எவ்வாறாயினும், மத்தியக் குழுக் கூட்டத்தில் மட்டும்தான் எமது உறுப்புரிமையை நீக்குவது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்க முடியும் –என்றார்.

# வவு. தியாக தீபம் திலீபனின் நினைவு தினம் அனுஷ்டிப்பு!












இந்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஈழத்தமிழன் உரிமையை வலியுறுத்தி நீராகாரமுமின்றி அஹிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்து பாரத நாட்டுக்கு பாடம் புகட்டிய ஈழத்தமிழர்களின் தவப்புதல்வன் தியாக தீபம் திலீபனின் நினைவு தினம் வவுனியா நகரசபைமண்டபத்தில்நேற்று முன்தினம் நடைபெற்றது.

உலகத் தமிழ் தேசிய மக்கள் அமைப்பின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இவ் நினைவு தினத்தில் 4 வயது சிறுவன் முதலாவது ஈகைச் சுடரைஏற்றி வைத்தமையுடன் அங்கிருந்த அனைவரும் சுடரை ஏற்றி அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனம் மற்றும் அதிதிகள் உரை என்பன இடம்பெற்றிருந்தது.

இந் நிகழ்வில் உலகத் தமிழ் தேசிய மக்கள் அமைப்பின் செயலாளர் அந்தோனிப்பிள்ளை யோகராணி, நகரசபை உறுப்பினர் பாலப்பிரசன்னா, அருட்தந்தை கலாநிதி ஜோன்கோல், புதுக்குளம் மகா வித்தியாலய அதிபர் கணேஸ்வரன், வட இலங்கை சமாதான நீதிவான் சங்க தலைவர் ஜெயவிந்தன், யாழ் மாவட்ட சமாதான நீதிவான் சங்க செயலாளர் ஜெயக்குமார், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# வவுனியாவில் இளைஞர், யுவதிகளுக்கு சமூக பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு









செட்டிகுளம் இளைஞர் கழக சம்மேளனமும் செட் டிக்குளம் இளைஞர் கழகங்களும் இணைந்து நடத்தும் சமூக வலையத்தள பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது

செட்டிக்குளம் இளை ஞர் கழகப் பிரதேச சம்மேள தலைவர் என்.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இச் செயலமர்வில் விரிவுரையாளராக ஷர்ஜுன் கலந்துகொண்டுசெயலமர்வில் பங்குற்றி இளைஞர், யுவதிகளுக்கு இணைய ஊடகங்கள் மற் றும் சமூக வலைத்தளங் கள் தொடர் பான விளக்கம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக தெளிவுபடுத்தினார்.

இச் செயலமர்வுக்கு அதிதிகளாக செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர் நிருஜன், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.சசிக்குமார் ஆகியார் கலந்து கொண்டிருந்தமையுடன் 60 இற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.







புஸ்ஸல்லாவ இளைஞர் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு றோட்டறி மெட்சிடி, கண்டி றோட்டறிகழகம் அனுசரணையில் இலவச வைத்திய முகாம் ஒன்று புஸ்ஸல்லாவ இந்து தேசிய கல்லூரியில் ஆளுனர் ரொடரியன் செபஸ்டியன் கருணாகரனின் தலைமையில் நடைபெற்றது.

இந்த வைத்திய முகாமில் கண் சிகிச்சை, பற்சிகிச்சை உட்பட பொது சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இந்த வைத்திய முகாமில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பொது மக்கள் கலந்துக் கொண்டு நன்மை பெற்றனர்.





# ‘எழுக தமிழ் பிரகடனம்’




**யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற எழுக தமிழ் நிகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனத்தின் முழு வடிவம் இது.**

**அன்பான தமிழ் மக்களே,**

இன்று நாம் முன்னெப்போதும் இல்லாதவாறு சிங்கள பேரினவாதத்தின் திட்டமிடப்பட்ட ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு கிடக்கின்றோம். தமிழ் மண் சிதைவுற்றுள்ளது. தமிழரின் குடித்தொகை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. வடக்கில் இருந்து கிழக்கு பிரித்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. தோற்கடிக்கப்பட்ட மக்கள் என்ற மனநிலையுடன் எமது தாயகம் தேர்தல் அரசியற் சகதிக்குள் மூழ்கியுள்ளது. நம்பிக்கையற்ற நடைபிணங்களாய் ஈழத் தமிழ் மக்கள் அரசியற் பாலைவனத்தில் தள்ளப்பட்டுள்ளனர்.

2015ஆம் ஆண்டு இனப்பிரச்சினைக்கான ஓர் தீர்வாகவும், சர்வதேச சமூகம் நம்புவது போல நிலைமாறுகால நீதிக்காகவும் தமிழ் மக்கள் மத்தியில் நல்லாட்சியென அறிமுகப்படுத்தப் பட்டதற்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவானது கடந்த ஒக்ரோபர் மாதம் ஆட்சிக் குழப்பத்தோடு வழமைபோல தோல்வியில் முடிவுற்றது.

சிங்கள, பௌத்த மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராக போராடிவரும் தமிழ்த் தேசமானது பல்வேறுபட்ட நெருக்கடிகளையும், அழுத்தங்களையும் சந்தித்த பொழுதும் தனது அடிப்படையான கூட்டுரிமைகளில் எப்போதுமே உறுதியாக இருந்து வருகின்றது.

இவ்வாறான ஓர் சூழலில் இன்றைய எழுக தமிழ் 2019 தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் பொது மக்கள், அமைப்புக்கள், புலம் பெயர் சமூகம், நட்புறவு சக்திகள் மற்றும் அரசியற் கட்சிகள்என அனைத்துத் தரப்பினரதும் பங்குபற்றுதலுடன் தமிழ்த் தேசிய எழுச்சியாக எழுந்து நிற்கின்றது.

இப் பேரெழுச்சியானதுநம்பிக்கையிழந்த எம் மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களின் ஒன்றுபட்ட எழுச்சியாகவும்,பல்வேறு நாடுகளில் உலகத் தமிழர்கள் முன்னெடுக்கும் ஒருமைப்பாட்டு;எழுச்சிகளின் திரட்சியாகவும் தென்னிலங்கைக்கும், இலங்கைத் தீவின்மீது கரிசனை கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் ஒரு வலுவான செய்தியைச் சொல்லி நிற்கின்றது.

இலங்கையில் தமிழினம் இன்று மிக மோசமான ஒரு சூழலை எதிர் கொண்டுள்ளது. முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நிகழ்த்திய அகந்தையோடு சிங்கள, பௌத்த விரிவாக்கமானது முன்னெப்போதும் இல்லாதளவில் முன்னெடுக்கப்படுகின்றது.

இராணுவ நிலைகளை அதிகரித்தல் அதனைச் சுற்றி பௌத்த விகாரைகளையும், சிங்களக் குடியேற்றங்களையும் நிறுவுதல் உட்பட எமது வழிபாட்டுத் தலங்கள், மற்றும் பண்பாட்டு மையங்களை இல்லாமலாக்கும் செயற்பாடுகள் வனபரிபாலனத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம்,தொல்பொருள் திணைக்களம், கடல் நீரியல் திணைக்களம், கனிமவியல் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம், உல்லாசப் பயணத் துறை, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை போன்றவற்றின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு சர்வதேச சமூகம் வெளிப்பார்வையில் கண்டுகொள்ள முடியாத நுட்பமான வழிமுறைகளைக் கையாண்டு எமது வாழ்வியல், பொருளாதார, பண்பாட்டு அடையாளங்களை சிதைத்து வருவதுடன்தமிழ் மக்களின் வளங்களையும் ஆக்கிரமிப்பு செய்து வருகின்றது.

கன்னியாவில்,தென்னமரவாடியில், பழைய செம்மலையில்,வெடுக்குநாறிமலையில், நாவற்குழியில் என தமிழர் நிலமெங்கும் தீவிரப்படுத்தப்படும் ஆக்கிரமிப்புக்கள் கட்டமைக்கப்பட்ட சிங்களப் பேரினவாதத்தின் தமிழ் மக்கள் மீதான தொடர்ச்சியான இனவழிப்பு நிகழ்ச்சி நிரலை உறுதி செய்து நிற்கின்றது.

தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளுக்கான நீதியையும் அவை மீள நிகழாமைக்கான உறுதிப்பாட்டையும் வேண்டி சர்வதேசத்தின் முன்னிலையில் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைச் சபை தமிழ் மக்களை திருப்திப்படுத்தாத தீர்மானங்களைத் தமிழ் மக்களின் பலமான எதிர்ப்பின் மத்தியிலும் முன்வைத்து அதனை நடைமுறைப்படுத்தக் கோரி இலங்கை அரசுக்கு இரண்டு தடவைகளாக நான்காண்டு கால அவகாசத்தை வழங்கியிருந்தும், அதனை கிஞ்சித்தும் மதிக்காத இலங்கை அரசு மாறாக சர்வதேச சமூகத்திற்கே சவால் விடும் வகையில் போர்க் குற்றவாளிகளையே மிக உயர் பதவிகளுக்கு நியமித்து வருகின்றது. இதன் உச்சமாக அண்மையில் நடந்த இராணுவத் தளபதியின் நியமனத்தைக் காணலாம்.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றவை எனக்கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக் எதிரான குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் என பெயர் குறிப்பிடப்பட்டு ஆதாரங்களோடு இலங்கை இராணுவத்தினர் குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டிருக்கின்ற போதும், இன்று வரை ஒருவர் கூட கைது செய்யப்படவோ, விசாரணை செய்யப்படவோ இல்லை என்பதிலிருந்து இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறை மீது நாம் நம்பிக்கை கொள்ள முடியாது என்பது தெளிவாகிறது. இந்நிலையில் தான் எமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணையைக் கோரி நிற்கின்றோம்.

இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசக் கட்டமைப்பு பொறுப்புக் கூறத் தயாரில்லை. எனவே பன்னாட்டு விசாரணையை தவிர வேறு வழியில்லை. இதனைச்சர்வதேசசமூகம்உணர்ந்து கொள்ள வேண்டும்.

யுத்தம் முடிவுக்கு வந்து பத்தாண்டு காலத்தின் பின்னரும் அரசியல் கைதிகளுக்குக் தீர்வு கிடைக்கவில்லை. பயங்கரவாத தடைச் சட்டம் உள்ளவரை அரசியற் கைதிகளுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை.பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒரு கருவியாகக் கையாண்டு தமிழ் சிவில் எதிர்ப்புக்களை – தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்களைஅரசு அச்சுறுத்தி வருகின்றது. இதுஇன்று யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் கைது வரை சென்றிருக்கின்றது.

அரசியல் கைதிகள் விவகாரத்தில் எமது மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு போர் முடிந்து பத்தாண்டுகள் கடந்தும் தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காக காத்திருப்பது வெளிப்படையான எடுத்துக்காட்டாகும். ஜே.வி.பி கிளர்ச்சியின் பின்னர் அவர்களுடைய போராளிகள் எதுவித நிபந்தனைகளுக்கும் அப்பால் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்கள். மாறாகத் தமிழ் இளைஞர்கள் போர் முடிந்து பத்தாண்டுகள் கடந்தும் நீதியான விசாரணைகள் ஏதுமின்றி சந்தேகத்தின் பேரில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும். அவ்வாறு விடுதலை செய்யப்படும் போதுதான் இலங்கை அரசானது நீதி, பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் பற்றிப் பேசமுடியும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் 900 நாள்களைக் கடந்து விட்டது. அதற்கான தீர்வுஎதுவும் கிடைக்கப் பெறவில்லை. பதிலாக அப்போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்யும் நோக்குடன் அரசாங்கம் காணமல் போனார் அலுவலகங்கள் என்னும் போர்வையில் அலுவலகங்களைத் திறந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதம் 6000 ரூபா தருவதாகக் கூறுகின்றனர். காணமல் ஆக்கப்பட் டோரது உறவுகள் தமது சொந்தங்களுக்காக நீதி கேட்டு மட்டுமே போராடுகின்றார்களே தவிர நிவரா ணங்களுக்காக அல்ல.

குறிப்பாக வட்டுவாகல் மற்றும் ஓமந்தைச் சோதனைச் சாவடிகளில் தமது உறவுகளை இராணுவத்திடம் கையளித்த பெற்றோரும், வாழ்க்கைத் துணைகளும், சகோதரரர்களும், உறவினர்களும் இன்றும் கண்கண்ட சாட்சிகளாக இருக்க, அவர்களுடைய சாட்சிகளின் அடிப்படையில் உண்மைகளைக் கண்டறிந்து இப்பிரச்சினைக்கு நீதியான தீர்வினை வழங்குவதற்கு மறுத்து வருகின்ற இலங்கை அரசாங்கம் தற்போது காணாமல் போனோர் அலுவலகங்களைத் திறந்து பாதிக்கப்பட்ட மக்களையும் சர்வதேச சமூகத்தினையும் தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்றது.

இலங்கை அரசானது இராணுவ மயமாக்கலின் ஊடாக தமிழ் சமூகத்தினைப் பிளவுபடுத்தி, சமூக உறவு முறைகளைச் சிதைத்து, தமிழர் கூட்டாக ஜனநாயக ரீதியில் அணிதிரள்வதற்கு எதிராக திட்டமிட்டு தடைகளை ஏற்படுத்தி வருகிறது. தொடர்ந்தும் மக்களது காணிகளை சுவீகரித்து வைத்திருப்பதன் மூலம் உல்லாச விடுதிகள், விவசாயப் பண்ணைகள், இதர வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களின் வாழ்வாதாரத்தை பறிப்பதுடன்தொடர்ந்தும் பொதுச் சேவை நிர்வாக விடயங்களிலும் தலையீடு செய்து வருகின்றது.

படைத் தரப்பினரின் ஒத்துழைப்புடன் தென்னிலங்கை மீனவர்களால் எமது பிரதேசக் கடல் வளங்கள் அபகரிக்கப்படுகின்றன. தென்னிலங்கை மீனவர்கள் வடகிழக்கு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைவதுடன்,வாடிகளை அமைத்து தமிழ் மீனவர்களது வாழ்வாதாரங்களை ஆக்கிரமிப்பதன் மூலம் எமது மீனவர்கள் சொந்த இடங்களிலிருந்து வெளியேறவேண்டிய சூழல் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது.

மேலும் தென்னிலங்கை மீனவர்கள் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் ஊடாக எமது கடல் வளம் சிதைக்கப்படுகின்றது. இவையாவும் அரச பாதுகாப்புத் தரப்பினரின்; ஊக்குவிப்புடன் முன்னெடுக்கப்படுகின்றது. வடக்கில் சில துறைமுக அபிவிருத்தி திட்ட முன்னெடுப்புக்கள் தமிழருக்கான அபிவிருத்திகளாக காட்டப்பட்டாலும் அது உண்மையில் தென்னிலங்கை மீனவர்களுக்கான பாதுகாப்பான தரிப்பிடங்களுக்காகவே அமைக்கப்படுகின்றன. அங்கு தென்னிலங்கை மீனவர்களின் அதிக பிரசன்னமும் அவர்களுக்கான படைத்தரப்பினரின் ஒத்துழைப்பும் தமிழ் மீனவர்களின் தொழிலை பாதிப்பதுடன் தமிழர் தமது சொந்த வாழ்விடங்களிலேயே தாழ்வு நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் அவர்களது பாரம்பரிய வாழ்விடங்களில் குடியமர முடியாத நிலை இன்னமும் தொடர்கின்றது.

வடகிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளிலே தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்ற சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளுக்கு பூரண அனுசரணையையும், பாதுகாப்பையும் வழங்குவதினூடாக இலங்கை இராணுவம் தமிழர்களின் இருப்பினை மலினப்படுத்துகின்றது.

இந் நிலையிலேயே எம்மக்கள்; தமிழ் தலைமைகளுக்கும் முன்சென்று தாமாகவே பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு போராட்டம், கிழக்கிலும் வடக்கிலும் முன்னெடுக்கப்படும் காணமால் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம், தமிழ் அரசியற் கைதிகள் விடுதலைக்கான போராட்டம், நீராவியடிப் பிள்ளையார் கோவில் போராட்டம், கன்னியா வெந்நீருற்றுப் போராட்டம், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்துவதற்கான போராட்டம் என தமது அன்றாடக் கோரிக்கைகள் தொடக்கம் அரசியல் விடயங்களையும் முன்வைத்து போராட்டங்களை தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர்
Kalaikathir





பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com

# ஆழ்கடலில் அக்கினிப் பரீட்சை!

(நேற்றைய தொடர்ச்சி...)

விடிந்ததும் கப்பல்கள் தென்பட்டாலும் அவை அருகே நெருங்கி வர இயலவில்லை. நான் எனது தாயாரை தொடர்பு கொண்டேன். உற்சாகமான அவரது பதிலை எனது செய்தி மழுங்கடித்தது. முழுமையாக அவர்களை கலவரப்படுத்த விரும்பாமல் சமாளித்து தொடர்பைத் துண்டித்துக் கொண்டேன்.

கீழ் தளத்தில் வாகனங்கள் தீப்பற்றி அவற்றின் எரிபொருள் தாங்கிகள் வெடித்து சீறி எரிகின்ற ஓசை அச்சத்தை மேலும் அதிகரிக்க, மேல் தளத்தில் சூடேறும் உலோகத் தளத்தில் தாங்க முடியாத குளிர்காற்றில் நாங்கள் தவித்திருக்க மழை சோவெனப் பொழியலானது.



குளிரும் கரும்புகை நெடியும் மழையும் கப்பலின் கட்டுப்பாடில்லாத  தள்ளாட்டமும் மயக்கம் தராத குறையாக ஆட்டிப் படைத்தன. இயற்கைக் கடன்களை அடக்க முடியாமல் நின்ற இடத்திலேயே கழிக்க வேண்டி இருந்தது. அசைந்தால், விடுபட்டால் கதி தெரியாது போய்விடும். குடும்பத்தை பிரிந்தால் மீண்டும் சந்திக்க முடியாது.

இடியும் மின்னலும்கூட அச்சுறுத்தலாக இருந்தன. தலைக்கு மேலே ஹெலிக்கொப்டர் ஒன்றின் சடசடத்த ஓசை தெம்பைத் தந்தாலும் அதனால் உடனடியாக அனைவரையும் மீட்க இயலாது என்பதே உண்மை.

அதிலிருந்து இறக்கப்பட்ட கயிற்றை பற்றப் பலத்த போராட்டம் நடந்து கொண்டிருக்க எனது மகள்களில் ஒருத்தியை மேலே அனுப்ப முடிந்தது. குடும்பம் கூறு போடப்பட்டு விட்டது. அடுத்து வந்த இரண்டு ஹெலிகளில் எங்களுக்கு இடமேதும் கிடைக்கவில்லை. அதாவது கயிற்றை பற்றிப் பிடிக்க நெருங்க முடியவில்லை. நெருங்கினால் நெரித்தே கொன்று விடுவார்கள்.

நான்காவது ஹெலியில் அடுத்த மகளை கயிற்றைப் பற்றவைத்து தெம்பு கொடுத்து ஏற்றிவிட்டபின் கணவரை தவிர்த்து தன்னையும் ஏற்றி ஒரு கப்பலில் இறக்கி விட்டதாகவும் முன்னைய மகள் சென்றவிடம் தொயாது தவித்ததாகவும் எரியும் கப்பலில் விட்டு வந்த கணவனின் கதி பற்றிய ஏக்கம் வேறு கொல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

கிரேக்கத்தில் கரை சேர்ந்து தாயாருக்கு மீண்டும் அழைப்பை ஏற்படுத்தியபோது கணவரும் குளிரில் விறைத்த நிலையில் மீட்கப்பட்டார் எனவும் வைத்தியசாலையில் இருக்கிறார் எனவும் அவர் தெரிவித்தது ஒன்று சேர இயலவில்லை என்றாலும் மிகுந்த தெம்பைக் கொடுத்தது.

எங்களது உல்லாச புரியான கார் தீயோடு சங்கமமாகிவிட்டது. சொத்துக்கள் பொருள்கள் மீட்கப்படவில்லை. உயிர் இழப்புக்கள் இன்றி குடும்பம் ஒன்று சேர்ந்ததே பெரிய காரியமாகப் பட்டது. இனிமேல் விடுமுறையைக் கழிக்க மீண்டும் கப்பல் ஏற மாட்டோம் என்கிறார்கள் அவர்கள்.

பயணிகள் கலவரமடைதலைத் தவிர்த்து நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர போராடுவதிலேயே கப்பல் பணியாளர்கள் முனைப்புக் காட்டிக் கொண்டனர்.

எனினும் கருகி உருகி எரியும் பிளாஸ்டிக் நெடி மூச்சு விட சிரமமான புகை எல்லாம் சேர்ந்து பயணிகளை துயிலெழுப்பி அந்த அதிகாலையில் திக்குமுக்காட வைத்துவிட்டன என்கிறார் பிறிதொரு பயணி.

கணவரும் நானும் தண்ணீருக்குள் தவறி விழுந்துவிட்டோம். அவர் கப்பலின் இரும்புச் சுவரோடு மோதிக் கொண்டார். மூக்கில் இருந்து இரத்தம் கசிய அவரது மரணப் போராட்டத்திற்கு நான் சாட்சியாகி போனேன். பின்னர் அவரைக் காணவில்லை. நான் ஒரு உயிர்காப்பு படகிலிருந்து மீட்கப்பட்டேன். இரண்டு நாள்கள் கழித்து அவரது உடல் மீட்கப்பட்டது என்கிறார் டௌலி.

தீ எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதோ ஒரு சம்பிரதாயத்துக்காக எல்லாம் நடந்து முடிந்த பின்புதான் என்கிறார் கிறிஸ்ரோஸ்.

உயிரைக்காக்க போராட்டம் ஹெலிகளைக் கண்டதும் வலுவடைந்தது. முண்டியடித்துக் கொண்டு பலரும் கயிற்றை பிடிக்கவும் உயிர்காப்பு கூடைகளுக்குள் குதிக்கவும் முயன்றமை பயங்கரமான காட்சி என்கிறார் ஒருவர். பெண்களையும் குழந்தைகளையும் தள்ளி விலக்கி ஆண்கள் முந்திக் கொண்டனர் எனவும் பெண்களுக்கான முன்னுரிமை மதிக்கப்படவில்லை எனவும் பொருமிக் கொண்டார் பெண் ஒருத்தி.

உயிர்காப்புபடகை பிடிக்க பயணிகள் வரிசை கோர்த்து நின்ற வேளை அத் தளத்தை தீ சுவீகரித்துக் கொண்டதாகவும் படகுகள் சில எரிந்து கொள்ள சில படகுகளில் சனங்கள் தொற்றிக் கொண்டனர் எனவும் கண்முன்னே கண்ட ஆங் கிலத் திரைப் படக் காட்சியை கண்கள் கலங்க விவரித்தார் ஒரு பயணி.

இடமிருந்தும் கூட மேலும் ஆட்களை ஏற்ற அவகாசம் இல்லாமலே தீயினிற்கு தப்பி படகு கப்பலிலிருந்து விடுபட்டு கடலில் இறக்கப்பட்டது கொடுமையிலும் கொடுமை என்றார் அவர்.

உல்லாசம் தேடி உலகினை வலம்வரப் புறப்படுபவர்கள் இப்படியான இக்கட்டுக்களில் புதிய சூழலில் மாட்டுப்பட்டுத் தவிக்கிறார்கள். எமது நாட்டு ஹயஸ் விபத்துக்கள் கூட இவ்வாறு சாலைகளில் இக்கட்டாக அமைவதுண்டு.

(முற்றும்)

குளிரும் கரும்புகை நெடியும் மழையும் கப்பலின் கட்டுப்பாடில்லாத தள்ளாட்டமும் மயக்கம் தராத குறையாக ஆட்டிப்படைத்தன. இயற்கைக் கடன்களை அடக்க முடியாமல் நின்ற இடத்திலேயே கழிக்க வேண்டி இருந்தது. அசைந்தால், விடுபட்டால் கதி தெரியாது போய்விடும். குடும்பத்தை பிரிந்தால் மீண்டும் சந்திக்க முடியாது. இடியும் மின்னலும்கூட அச்சுறுத்தலாக இருந்தன. தலைக்கு மேலே ஹெலிக்கொப்டர் ஒன்றின் சடசடத்த ஓசை தெம்பைத் தந்தாலும் அதனால் உடனடியாக அனைவரையும் மீட்க இயலாது என்பதே உண்மை.





# வேட்பாளர் முக்கியமில்லை தீர்வே எமக்குப் பிரதானம்!

## சஜித் தரப்பிடம் சம்பந்தன் திட்டவட்டம்

கொழும்பு, செப். 17

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதில் எமக்குப் பிரச்சினையில்லை. கட்சியின் தரப்பில் களமிறங்கும் வேட்பாளர் தமிழர்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வை வழங்கப் போகின்றார் என்பதே எமக்கு முக்கியம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும், எமது நிபந்தனைகளை அங்கீகரித்து அதற்கு உத்தரவாதம் வழங்கும் நபராக இருந்தால் எம்முடன் பேச்சு நடத்தும் நபருடன் நாம் பேசி அவரை ஆதரிப்பது குறித்து தீர்மானம் எடுப்போமெனவும் சஜித் தரப்பு பிரதிநிதிகளுடனான பேச்சில் இரா.சம்பந்தன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவைக் களமிறக்கும் நோக்கில் ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தரப்பு அணியினர் தமக்கான ஆதரவைத் திரட்டும் வகையில் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் மற்றும் சிங்கள கட்சிகளைச் சந்தித்து பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில் நேற்று முன் தினம் அமைச்சர்களான மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம, ராஜித சேனாரத்ன ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் கட்சியின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்து தமக்கான ஆதரவைக் கோரியுள்ளனர். இதன்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றுமுன் தினம் முற்பகல் 11 மணிக்கு ஆர்.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ஐ)

## 64 பொலிஸ் அதிகாரிகளுக்கு நாடு முழுவதும் இடமாற்றம்

கொழும்பு, செப். 17

சுன்னாகம், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உள்பட நாடுமுழுவதும் 64 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் முருகையா செல்வக்குமார் மாத்தறைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அவருக்குப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக மாற்றம் வழங்கப்படவில்லை.

அத்துடன், மூன்று வருடங்களுக்கு மேலாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் தென்னிலங்கைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் இருவர், மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவர், பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் 25 பேர் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் 32 பேர் என 64 பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான இடமாற்றம் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதித் தேர்தல்; வர்த்தமானி அறிவிப்பு இன்னும்10 நாள்களில்

### தேர்தல்கள் ஆணையர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.17

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள திகதி மற்றும் வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் கால எல்லை அடங்கிய சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு அடுத்த 10 நாள்களுக்குள் வெளியிடப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ள திகதி மற்றும் வேட்புமனுக்கள் கோரப்படும் அறிவிப்பு என்பன ஒரே வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட வேண்டும்.

இந்த வர்த்தமானி அறிவிப்பைத் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டு, 16 தொடக்கம் 21 நாள்களுக்குள் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.



ஒரு பௌர்ணமி விடுமுறை நாளிலோ அல்லது அரசாங்க விடுமுறை நாளிலோ வேட்புமனுவை ஏற்றுக்கொள்ளவோ, தேர்தலை நடத்த முடியாது என ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட 4 தொடக்கம் 6 வாரங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

அதற்கமைய தேர்தல் நடத்துவதற்கு பொருத்தமான நாள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டார் பாடலில் சாதித்தனர் வவு.தமிழ் மத்தி மாணவர்கள்



வவுனியா, செப். 17

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற தேசியமட்ட தமிழ்த் தினப் போட்டியில் நாட்டார் பாடலில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் முதலிடம் பெற்றனர்.

இரண்டாவது இடத்தைப் புனித செபமாலை தமிழ் மத்திய மகா வித்தியாலயமும், மூன்றாவது இடத்தை மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயமும் பெற்றன. (ஐ)

## சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயரதிகாரி இன்று வருகை



கொழும்பு,செப்.17

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்ட அதிகாரியான சென் மின் இரண்டு நாள்கள் பயணமாக இன்று கொழும்பு வரவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசாங்கத்தின் மூத்த மற்றும் எதிர்க்கட்சி தலைவர்களையும் அவர் இங்கு சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

சீனஅதிபர் ஷி ஜின்பிங்கின் நெருங்கிய சகாவான சென் மின், சீனாவில் வளர்ந்து வரும் ஒரு நட்சத்திரமாக பார்க்கப்படுகிறார்.

இவர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சோங்கிங் செயலராக 2017இல் நியமிக்கப்பட்டார்.

பின்னர் 19 ஆவது கட்சி மாநாட்டில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுகளை எடுக்கும் உயர் சபையான, 25 பேர் கொண்ட அரசியல்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124
0773366443
0766999597
0717772377
0215675566
0212229581
0212222050
0212220388




## இலங்கையில் ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றிய ஜூனியர் இந்திய அணி!

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில், பங்களாதேசத்தை 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்றது. ஆசிய நாடுகளான இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், ஆப்கானிஸ்தான், குவைத், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் கலந்துகொண்டன.

இந்நிலையில், இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் இறுதிப்போட்டியில் நேற்றுமுன்தினம் மோதின.

கொழும்பில் நடந்த இந்தப் போட்டியில், முதலில் ஆடிய இந்திய அணி 32.4 ஓவர்களில் 106 ஓட்டங்களுக்கு சுருண்டது.

அதிகபட்சமாக கரண் லால் 37 ஓட்டங்களும், துருவ் 33 ஓட்டங்களும் எடுத்தனர். பங்களாதேஷ் தரப்பில் மிருதுன்ஜோய், மிம் ஹொசைன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் ஆடிய பங்களாதேஷ் அணி 33 ஓவர்களுக்கு 101 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இதனால் இந்தியா 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'த்ரில்' வெற்றி பெற்றது.

இந்திய அணி தரப்பில் அதர்வா 5 விக்கெட்டுகளையும், ஆகாஷ் சிங் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம், ஜூனியர் ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றி இந்திய அணி சாம்பியன் ஆனது.

## பதிலடி கொடுப்பார் டோனி!

டோனியின் ஓய்வு விவகாரம் தற்போதைக்கு முடிவு பெறாது என்றும், தனது ஆட்டத்தின் மூலம் அவர் பதிலடி கொடுப்பார் என்றும் இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி தற்போது தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி20 தொடரில் விளையாடுகிறது. இதனைத் தொடர்ந்து, 3 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ரி20 போட்டி நேற்று நடந்தது.

இந்நிலையில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்கான இந்திய அணியின் தேர்வு குறித்தும், டோனியின் ஓய்வு குறித்தும் அணித்தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில் 'சுழற்பந்து வீச்சாளர்களான குல்தீப் யாதவ், சாஹல் ஆகியோர் ரி20 தொடரில் சேர்க்கப்படாதமைக்கு அவர்களது துடுப்பாட்ட செயற்பாடுதான் காரணம். இதனால்தான் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக ஆடியவர்களுக்கு இந்த தொடரில் வாய்ப்பு தரப்பட்டது. சம விகிதத்தில் அணி அமைய வேண்டும் என்று கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அனைத்து நாடுகளிலும் 9 மற்றும் 10 ஆவது வரிசை வீரர்கள் வரை துடுப்பாட்டம் செய்யும்போது, நாமும் அவ்வாறு ஏன் ஆடக்கூடாது?

எந்த முடிவு எடுத்தாலும் பலமான சரியான அணி அமைய வேண்டும் என்பதே நோக்கமாகும். அடுத்து வர இருக்கும் ரி20 உலகக் கிண்ண தொடர் ஒரு மைல்கல் போன்றதாகும். ஒவ்வொரு அணியும் அதற்காக




தீவிரமாக தயாராவார்கள். அதேபோல நாமும் சிறந்த அணியை உருவாக்குவோம்.

டோனி இந்திய கிரிக்கெட் மீது அக்கறை கொண்டவர். ரிஷப் பண்ட் போன்ற இளம் வீரர்களை உருவாக்கினாலும் 38 வயதான டோனி எப்போதும் விலை மதிப்பற்றவர். அவரது ஓய்வு விவகாரம் தற்போதைக்கு முற்றுப் பெறாது. விமர்சனங்களுக்கு டோனி தனது ஆட்டம் மூலம் சரியான பதிலடி கொடுப்பவர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

விளையாட்டில் அனுபவம் முக்கிய பங்கு வகிக்கும். பலமுறை டோனி இதை மைதானத்தில் நிரூபித்து இருக்கிறார். அவர் தொடர்ந்து ஆடும் பட்சத்தில் அணிக்கு விலைமதிப்பற்றவர். ஓய்வு முடிவு தனிப்பட்ட விடயமாகும்' என தெரிவித்துள்ளார்.

## ஆஷஸ் தொடரை சமன் செய்தது இங்கிலாந்து

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரின் 5 ஆவது ஆட்டத்தில் 135 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று 2 - 2 என தொடரையும் சமன் செய்தது இங்கிலாந்து.

இரு அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஆஷஸ் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. ஆஸி. 2 இலும், இங்கிலாந்து 1 ஆட்டத்திலும் வென்றன. ஒரு ஆட்டம் டிராவில் முடிந்தது. ஆஷஸ் கிண்ணத்தை




ஆஸ்திரேலியா கைப்பற்றிய நிலையில், இறுதி டெஸ்ட் ஆட்டம் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 294, ஆஸ்திரேலியா 225 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தன. இதன் தொடர்ச்சியாக இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் ஜோ டென்லி 94, பென் ஸ்டோக்ஸ் 67, ஜோஸ் பட்லர் 47 ஆகியோர் சிறப்பான ஆட்டத்தால் 329 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். ஆஸி. தரப்பில் நாதன் லயன் 4 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

399 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் ஆட்டத்தின் நான்காம் நாளான ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸ தொடர்ந்தது.

இங்கிலாந்தின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் ஆஸி. தொடக்க வரிசை வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். மார்கஸ் ஹாரிஸ் 9, டேவிட் வோர்னர் 11, ஸ்டீவ் ஸ்மித் 23 ஆகியோரை ஸ்டுவர்ட் பிராட் ஆட்டமிழக்கச் செய்தார். நிலை யான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த ஸ்மித் ஆட்டமிழந்தது, ஆஸி. அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

மார்னஸ் லேபுச்சேனை 14 ஓட்டங்களுக்கு வெளியேற்றினார் மிச்செல் மார்ஷ். மத்யூ வேட் இணை சேர்ந்து நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். பொறுமையாக ஆடிய வேட் டெஸ்ட் சதத்தை பதிவு செய்தார். எனினும் மிச்செல் மார்ஷை 24 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்பினார் ஜோ ரூட்.

அணித் தலைவர் டிம் பெயின் 21, பேட் கம்மின்ஸ் 9, நாதன் லயன் 1, ஹேஸல்வுட் 0 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர்.

1 சிக்ஸர், 17 பவுண்டரியுடன் 117 ஓட்டங்களை விளாசி வெளியேறினார் மத்யூ. இறுதியில் 77 ஓவர்களில் 263 ஓட்டங்களுக்கு ஆல் ஆட்டமிழந்தது ஆஸி.

இங்கி லாந்து தரப்பில் பிராட் 4 - 62, ஜேக் லீச் 4 - 49, ரூட் 2 - 26 விக்கெட்டுகளை சாய்த்தனர். இந்த வெற்றி மூலம் தொடரையும் 2 - 2 என சமன் செய்தது இங்கிலாந்து. தொடர் நாயகனாக ஸ்மித்தும், ஆட்ட நாயகனாக ஆர்ச்சரும் தேர்வு பெற்றனர்.



## இந்தியா - தென்னாபிரிக்கா முதல் ரி - 20 போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது!

பலத்த மழையால் இந்தியா – தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான முதல் ரி20 ஆட்டம் கைவிடப்பட்டது.

2020, ரி - 20 உலகக் கிண்ணத்துக்குத் தயாராகும் வகையில் இந்திய அணி அடுத்தடுத்து பல்வேறு தொடர்களில் ஆட உள்ளது. இதன் முதல் கட்டமாக தென்னாபிரிக்காவுடன் 3 ஆட்டங்கள் கொண்ட தொடர் நடைபெறுகிறது.

இதன் முதல் ஆட்டம் தர்சாலாவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதாக இருந்தது. இரவு 7 மணிக்கு ஆட்டம் தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தர்மசாலாவில் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. மழையால் ஹிமாசலப்பிரதேச கிரிக்கெட் சங்க மைதானம் முழுவதும் நீரால் சூழப்பட்டிருந்தமையால், டாஸ் போடுவது தாமதமானது.

களப் பணியாளர்கள் தொடர்ந்து மைதானத்தில் தேங்கி இருந்த நீரை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் மழை விடாதமையால், அப்பணியும் பாதிக்கப்பட்டது.

நடுவர்கள் ஆய்வு மேற்கொண்டதில் மழை பாதிப்பால் தொடர்ந்து ஆட்டத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது தெரிந்தது. இதனால் ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் ஆட்டம் முழுமையாகக் கைவிடப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இரண்டாவது ரி20 ஆட்டம் வரும் புதன்கிழமை மொஹாலியில் நடைபெறுகிறது.



# அம்பாறையிலும் கடையடைப்பு





அம்பாறை, செப். 17

எழுக தமிழ் பேரணிக்கு ஆதரவான கடையடைப்பு அம்பாறை மாவட்டத்தின் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இடம்பெற்றது.

தமிழர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு நீதி கோரி தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழ் பேரணி யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்தது.

இந்த நிகழ்வுக்கு ஆதரவாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் அம்பாறை மாவட்டத்தின் சேனைக் குடியிருப்பு, நற்பிட்டிமுனை, பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, காரைதீவு, திருக்கோயில் உள்ளிட்ட பகுதிகளில் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டு ஹர்த்தால் அனுஸ்டிக்கப்பட்டது. (ஐ)

## பாலித தேவரப்பெரும பிணையில் விடுதலை!

கொழும்பு, செப். 17

பிரதி அமைச்சர் பாலித தேவரப் பெரும உள்ளிட்ட 6 பேருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த 6 பேரும், ஒரு இலட்சம் ரூபாய் கொண்ட இரண்டு சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பிரதி அமைச்சர் உள்ளிட்ட 6 சந்தேகநபர்களும் நேற்று மத்துகம நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது மத்துகம நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நீதிமன்ற உத்தரவை மீறி மத்துகம, ஜேபட் பிரதேசத்தில் உயிரிழந்த நபர் ஒருவரின் சடலத்தை அந்தத் தோட்டத்தில் அமைந்துள்ள மயானத்தில் அத்துமீறி அடக்கம் செய்த சம்பவம் ஒன்று தொடர்பில் பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெரும உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியாவில் கடும் மழை

வவுனியா, செப். 17

வவுனியாவில் நேற்றுப் பெய்த இடியுடன் கூடிய கனத்த மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் கடும் காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்த நிலையில், நேற்று முற் பகல் வரை மழை நீடித்தது.

கன மழை காரணமாக பாடசாலைக் குச் செல்லும் மாணவர்கள், அரசஉத்தியோகத்தர்கள் எனப்பலரும் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்தனர். (ஐ)

## எழுக தமிழ்....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இன்று மக்கள் தலைமையேற்றிருக்கும் தமிழ்த் தேசிய அரசியலை மேலும் வலுவாக்கி, இருக்கக் கூடிய சர்வதேச நிலைமைகளையும், சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி சிறிலங்கா அரசின் அப்பட்டமான இனவழிப்பு நடவடிக்கைகளைப் பற்றிப் பேசவும், அதனை எதிர்க்கவும், தடுக்கவும,; போர்க்குற்றங்கள் மற்றும் தமிழ் இன வழிப்பு மீதான சர்வதேச விசாரணையை அழுத்தவுமாக நாம் மீண்டும் மீண்டும் தேசமாய் திரட்சி பெற வேண்டியுள்ளது.

மேலும், தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வு விடயத்தில்: தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு என்பது அவர்களை சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஓர் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் அமைந்தாலே ஒழிய வேறில்லை என்பதை தொடர்ச்சியான வரலாறும் தொடரும் நிலைமைகளும் மீண்டும் மீண்டும் இடித்துரைத்து நிற்கின்றன. அந்த வகையில், இலங்கையில் தமிழ் மக்களுக்கான எந்தத் தீர்வுத்திட்ட முயற்சியும் தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டவாறு பிரிக்கப்பட முடியாத வடக்குக் கிழக்குத் தாயகத்தில் தமிழ்த் தேசமும், அதனுடைய இறைமையும் அங்கீகரிக்கப்பட்ட சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சமஷ்டித் தீர்வாகவே அமைய வேண்டும் என்பதை மீண்டும் ஒரு முறை சர்வதேச சமூகத்திற்கும் சிங்கள அரசியற் தலைவர்களுக்கும் தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்திக் கூற விரும்புகின்றது.

தற்போது அசமைப்புச் சபையினால் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் புதிய அரசியல் யாப்பிற்கான இடைக்கால அறிக்கையானது உள்ளார்ந்த ரீதியில் 13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒற்றையாட்சி முறையையும் சிங்கள பௌத்த மேலாதிக்க நிலையையும் மேலும் வலுப்படுத்துவதற்கான ஓர் யோசனையாகும். அதனை தமிழ் மக்களாகிய நாம் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம் என்பதை எமது இப்பேரெழுச்சியின் மூலம் சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் உரத்துச் சொல்லுவோம்.

இந்த வகையிலேயே எம்மக்கள் முன்னின்று நடத்தும் போராட்டங்களின் கோரிக்கைகளும் தமிழ் மக்களது அரசியற் தீர்வு தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையினது தீர்வுத் திட்ட யோசனைகளும் இவ் எழுக தமிழ் பேரெழுச்சியின் பிரகடனங்களாக நிமிர்ந்து நிற்கின்றன.

இலங்கை அரசே, சர்வதேசமே!!

* சிங்கள பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்து
* பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கு
* தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்
* வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதியான தீர்ப்பை முன்வை
* வடக்கு - கிழக்கில் இராணுவ மயமாக்கலை நிறுத்து
* இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய இடங்களில் மீளக்குடியமர்த்து
* சர்வதேசமே! இலங்கையில் தமிழர் மீதான இனவழிப்பு விசாரணையை நடத்து

எமது மக்களின் தொடர் போராட்டங்களையும், எழுச்சிகளையும் நமது தேசத்தின் பலமாக மாற்றுவது தொடர்பாக நாம் காத்திரமான யோசனைகளை முன்வைத்துச் செயற்பட வேண்டியுள்ளது. அந்த வகையில் இவ் எழுக தமிழ் பரப்புரையின் போது நாம் சந்தித்த மக்கள் மற்றும் பொது அமைப்புக்களுடனான உரையாடல்களின் போது அவர்கள் முன்வைத்த கருத்துக்களை உள்வாங்குதோடு, தொடர்ந்தும் எமக்கான ஒரு வலுவான மக்கள் இயக்கத்தின் அவசியத்தில் அதற்கான காத்திரமான செயற் திட்டங்களை முன்வைத்து எமது தேசிய அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்புவோம் என உறுதி பூணுவோமாக.

தமிழ்த் தேசிய அரசியல் அடிப்படைகள் பேரம் பேச முடியாதவை, அவ்வாறே அதனைத் தாங்கி நிற்கும் தமிழ் தேசத்தின் திரட்சியான எழுக தமிழும் என்றுமே பேரம் பேச முடியாதவை.

எழுக தமிழ், எழுக தமிழ், எழுக தமிழ்.

## கடும் மழை காரணமாக கொழும்பில் வெள்ளம்

கொழும்பு, செப். 17

கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தையடுத்து கொட்டாஞ்சேனை - ஆமர் வீதி - பாபர் சந்தி முழுமையாக நீரில் மூழ்கி கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

நேற்று மதியம் பாபர் வீதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கொட்டாஞ்சேனை முதல் புறக்கோட்டை நவலோக சந்தி வரையான வீதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்காக புறக்கோட்டை, டாம் வீதி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும் குணசிங்கபுர தனியார் பஸ் நிலையமும் பகுதி அளவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே வாகன சாரதிகள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறும் போக்குவரத்துப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)






காலைக்கதிர் Kalaikathir



# 60க்கும் மேற்பட்டோர் சென்ற படகு ஆற்றில் கவிழ்ந்தது; 23 பேரே மீட்பு!

## முதல் கட்டமாக 11 சடலங்கள் கண்டுபிடிப்பு



அமராவதி,செப்.17

ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் 60 இற்கும் அதிகமானவர்கள் சுற்றுலா சென்ற படகு ஆற்றுவெள்ளத்தில் சிக்கி கவிழ்ந்த விபத்தில் முதல்கட்டமாக 11 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரி மாவட்டத்தின் வழியாக பாயும் கோதாவரி ஆற்றில் தற்போது வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்கிறது. நேற்றுமுன் தினம் பிற்பகல் நிலைவரப்படி வினாடிக்கு 5.13 லட்சம் கனஅடி தண்ணீர் ஆற்றில் இருந்து வெளியேற்றப்படுகிறது.

இந்தநிலையில், இம்மாவட்டத்தில் உள்ள தேவிப்பட்டினம் அருகாமையில் கண்டி போச்சம்மா ஆலயத்தில் இருந்து பாப்பிகொண்டலு என்ற சுற்றுலாத்தலத்துக்கு வெள்ளம் கரைபுரண்டு ஓடும் கோதாவரி ஆற்றின் வழியாக 60 இற்கும் அதிகமானவர்கள் ஆந்திர மாநில அரசின் சுற்றுலாத்துறைக்கு சொந்தமான படகில் நேற்றுச் சென்று கொண்டிருந்தனர்.

ஆற்றுச்சுழலில் சிக்கிய அந்தப் படகு கச்சுலூரு பகுதியின் அருகில் திடீரென்று நிலைதடுமாறி கவிழ்ந்தது. தகவலறிந்து விரைந்து சென்ற மீட்பு படையினர் ஆற்றுக்குள் மூழ்கிக் கொண்டிருந்தவர்களில் 23 பேரை உயிருடன் காப்பாற்றி கரை சேர்த்தனர்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த 11 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

# மோடிக்கு வந்த பரிசுகள் ஏலத்தில் விற்பனைக்கு!

புதுடில்லி,செப்.17

பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்ட 2,700 நினைவுப்பரிசுகள் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.


பிரதமர் நரேந்திர மோடிக்கு பல்வேறு தரப்பினரால் நினைவுப்பரிசாக வழங்கப்பட்ட சால்வைகள், அங்க வஸ்திரங்கள், தலைப்பாகைகள், பிற கைவினைப்பொருள்கள் என 2,700 நினைவுப் பரிசுகள் சேர்ந்துள்ளன. அவை ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

இதற்கான ஏலம் கடந்தவெள்ளிக்கிழமை தொடங்கியது. அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை இந்த ஏலம் நீடிக்கிறது. பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட 'மாதிரி' மாட்டு வண்டியும் ஏலத்துக்குவந்துள்ளது. இதன் தொடக்க விலை ரூ.1,000 ஆகும்.



இதை மத்திய கலாசாரம் மற்றும் சுற்றுலா துறை மந்திரி பிரகலாத் பட்டேல் ரூ.2,100 இற்கு ஏலம் கேட்டுள்ளார். அடிப்படையில் விவசாயி என்பதால் இந்த மாதிரி மாட்டு வண்டியை பிரகலாத் பட்டேல் ஏலம் கேட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய விமானப்படைக்கு 'ஸ்பைஸ் 2000' குண்டுகள்



விமானத்தில் இருந்து வீசப்படும் 'Spice 2000' ரகக் குண்டுகளை இந்திய விமானப்படைக்கு இஸ்ரேல் அரசு அனுப்பி வைத்துள்ளது. முதல் கட்டமாக குவாலியரில் உள்ள இந்திய விமானப் படை தளத்திற்கு இவை அனுப்பப்பட்டுள்ளன.

இங்கிருந்துதான் இந்த குண்டுகளைப் பயன்படுத்தக்கூடிய மிராஜ் 2000 ரக போர் விமானங்கள் இயக்கப்படுகின்றன. மிராஜ் ரக விமானங்கள்தான் பாகிஸ்தானின் பாலகோட்டில் எதிரிகளின் இலக்குகளைக் குறிவைத்துஸ்பைஸ்2000ரககுண்டுகளை வீசித் தகர்த்தன.

பாலகோட் தாக்குதலில் 12 குண்டுகள் பயன்படுத்தப்பட்டன. இந்தக் குண்டுகளால் ஒரு கட்டடத்தையே முற்றிலும் தரைமட்டமாக்க முடியும். இந்த ரகத்தில் நூறுக்கும் மேற்பட்ட குண்டுகளை வாங்குவதற்காக இஸ்ரேலுடன் 250 கோடி ரூபாவுக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# மாநிலங்களை குறிவைத்து தீவிரவாதிகள் சதித்திட்டம்

## மிரட்டலை அடுத்து பாதுகாப்பு தீவிரம்



ரயில் நிலையங்களையும் வழிபாட்டுத் தலங்களையும் தகர்க்கப் போவதாக தீவிரவாத இயக்கம் விடுத்த மிரட்டலை அடுத்து ஆறு மாநிலங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் நவராத்திரி, தசரா பண்டிகை. அதனைத் தொடர்ந்து தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது.

இந்தப் பண்டிகைக் காலங்களில் பல்லாயிரக்கணக்கான இந்து மக்கள் திரளும் இடங்களில் தாக்குதல் நடத்த இருப்பதாக ஜெய்ஷே முகமது தீவிரவாத இயக்கம் மிரட்டல் விடுத்துள்ளது. ரயில்நிலையங்கள், வழிபாட்டுத்தலங்களில் குண்டு வெடிக்கும் என்ற எச்சரிக்கையால், ஆறு மாநிலங்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சென்னை, மும்பை, பெங்களூர், போபால், இட்டார்சி, குருஷேத்ரா உள்ளிட்ட 11 ரயில் நிலையங்களில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஹரியானா, உத்தரப் பிரதேசம், குஜராத் ஆகிய 6 மாநிலங்கள் தீவிரவாதிகளால் குறிவைக் கப்பட்டுள்ளன.

கராச்சியைச் சேர்ந்த மசூத் அகமது என்ற தீவிரவாதியின் பெயரால் மிரட்டல் கடிதம் ஒன்று ரோட்டக் ரயில் நிலைய அதிகாரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இந்த மிரட்டல் கடிதத்தை அடுத்து ஹரியானா உள்ளிட்ட 6 மாநிலங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

# வாய்க்கால் வரப்பில் மறைந்திருந்த 10 அடி ராட்சத முதலை பிடிபட்டது

தமிழ்நாடு கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே பாசன வாய்க்கால் வரப்பில் மறைந்திருந்த 10 அடி நீளமுள்ள, ஆயிரம் கிலோ எடை கொண்ட ராட்சத முதலை பிடிபட்டுள்ளது.

சிதம்பரம் அடுத்த கூத்தன் கோயில் கிராமம் அருகே உள்ள பாசன வாய்க்காலில் ராட்சத முதலை ஒன்று இரு நாள்களாகத் தண்ணீரில் கிடப்பதை ஊர்மக்கள் பார்த்துள்ளனர். உள்ளூர் இளைஞர்கள் பிடிக்க முயன்ற போது வரப்புக்குள் முதலை ஒளிந்து கொண்டது.



இதுபற்றிய தகவலின் பேரில் வனத்துறையினர் சென்று, உள்ளூர் இளைஞர்கள் உதவியுடன் 3 மணி நேரம் போராடி லாவகமாக முதலையின் வாயை கட்டி வெளியே இழுத்து வந்தனர். பின்னர் அது தப்பி ஓடிவிடாதபடி உடலையும் கட்டினர்.

பிடிபட்ட முதலையை மினி சரக்கு வாகனத்தில பாதுகாப்பாக ஏற்றிச்சென்று, சிதம்பரம் அருகில் உள்ள வகாரமாரி குளத்தில் விட்டனர்.

# தெலுங்கானா முதல்வரின் வளர்ப்பு நாய் மரணம்; சிகிச்சை அளித்த வைத்தியர்களின் மீது வழக்கு!

ஐதராபாத்,செப்.17

தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ் பங்களாவில் வளர்ந்து வந்த செல்ல நாய் மரணமடைந்ததை அடுத்து, அதற்கு சிகிச்சை அளித்த வைத்தியர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ் ஐதராபாத்தில் உள்ள அரசு பங்களாவான பிரகதி பவனில் வசித்து வருகிறார்.

இந்த பங்களாவில் 11 செல்ல நாய்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதில் 'ஹஸ்கி' வகையை சேர்ந்த 11 மாத நாய்க்கு கடந்த சில நாள்களுக்கு முன்பு உடல் நிலை மோசமானது. இதனால் உடல் கடுமையாக கொதித்தது.

கடந்த 2 நாள்களுக்குமுன்பு பஞ்சரா ஹில்சில் இருக்கும் தனியார் விலங்குகள் நல ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கிருந்த கால்நடை வைத்தியர்கள் லட்சுமி, ரஞ்சித் ஆகியோர் சிகிச்சை அளித்தும் பலனின்றி நாய் இறந்துவிட்டது.

இதையடுத்து பஞ்சரா ஹில்ஸ் பொலிஸில் ஒரு முறைப்பாடு அளிக்கப்பட்டது. அதில் சரியான மருத்துவ சிகிச்சைகள் அளிக்காததால் செல்லநாய் இறந்துவிட்டது, இதற்கு காரணமான கால் நடை வைத்தியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

(உ)

# சீனாவிடம் இருந்து ஹொங்கொங்கை விடுவிக்க இங்கிலாந்தின் உதவியைக் கோரிப் போராட்டம்



ஹொங்கொங்,செப்.17
ஹொங்கொங்கை சீனாவிடம் இருந்து மீட்க இங்கிலாந்து உதவ வேண்டும் என்பதை வலியுறுத்தி ஹொங்கொங்கில் உள்ள இங்கிலாந்து தூதரகம் முன்பு நூற்றுக்கணக்கானோர் திரண்டு போராட்டம் நடத்தினர்.

இங்கிலாந்தின் கொலனி ஆதிக்கத்தில் இருந்த ஹொங்கொங் 1997 ஆம் ஆண்டு சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது முதல் 'ஒரு நாடு; இரண்டு நிர்வாகம்' என்கிற கொள்கையில் சீனாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் ஹொங்கொங் இருந்து வருகிறது.

இந்தச் சூழலில் கைதிகள் பரிமாற்ற சட்ட திருத்த பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தற்போது சீனாவிடம் இருந்து ஜனநாயக உரிமைகள் கோரும் போராட்டமாக உருவெடுத்து உள்ளது.

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்து ஹொங்கொங்கை விடுவிக்கக் கோரி ஜனநாயக ஆதரவாளர்கள் போராடி வருகின்றனர்.

இந்த விவகாரத்தில் தலையிட்டு தீர்வுகாண சர்வதேச நாடுகளின் ஆதரவை ஹொங்கொங் போராட்டக்காரர்கள் கோரி வருகின்றனர்.

அந்த வகையில் ஹொங்கொங்கை சீனாவிடம் இருந்து மீட்க இங்கிலாந்து உதவ வேண்டும் என்பதை வலியுறுத்தி ஹொங்கொங்கில் உள்ள இங்கிலாந்துத் தூதரகம் முன்பு நேற்று நூற்றுக் கணக்கானோர் திரண்டு போராட்டம் நடத்தினர்.

இங்கிலாந்தின் தேசியக்கொடிகளை கைகளில் ஏந்தி போராடிய அவர்கள், கடவுள் இங்கிலாந்து ராணியை காப்பாற்றுவார், இங்கிலாந்து, ஹொங்கொங்கை காப்பாற்ற வேண்டும், ஒரு நாடு;இரண்டு நிர்வாகம் என்கிற திட்டம் காலாவதியாகிவிட்டது போன்ற கோஷங்களை முழங்கினர்.

அத்துடன், 1997 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஹொங்கொங்குக்கு உரிய தன்னாட்சி அதிகாரத்தை சீனா வழங்கியிருக்கிறதா என்பதை இங்கிலாந்து உறுதி செய்ய வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஹொங்கொங்கில் போராட்டம் திரும்பவும் வன்முறை வெடிப்பு!

## பலர் காயம்

ஹொங்கொங்,செப்.17
ஹொங்கொங் அரசின் தடையை மீறி நடைபெற்ற போராட்டத்தில் மீண்டும் வன்முறை வெடித்தது.

ஹொங்கொங்கில் சட்டவிரோத வழக்குகளில் சிக்குபவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையைச் சந்திக்க வைக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்ற சட்டத்தில் திருத்தம்கொண்டுவர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது.

இந்த சட்ட திருத்தப் பிரேரணையை முழுமையாக இரத்து செய்ய வேண்டும். போராட்டக்காரர்கள் மீது எந்தவித நடவடிக் கையும் எடுக்கக் கூடாது என வலியுறுத்தி இரண்டு மாதங்களுக்கு மேலாக மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். மக்களின் கடுமையான போராட்டத்தால், பின்வாங்கிய ஹொங்கொங் அரசு, சர்ச்சைக்குரிய சட்டத்தை ரத்து செய்தது.

எனினும், ஹொங்கொங்கில் தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகின்றது. அதன் ஒரு பகுதியாக, அரசு விதித்திருந்த தடையையும் மீறி



நேற்றுமுன்தினம் ஏராளமானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் போது, பாதுகாப்பு படையினர் மீது கற்களையும் பெட்ரோல் குண்டுகளையும் சிலர் வீசியதால், வன்முறை வெடித்தது.

# ஆப்கான் அரசு படை தாக்குதலில் 35 தலிபான்கள் கொல்லப்பட்டனர்



காபூல்,செப்.17
ஆப்கானிஸ்தான் நாட்டின் ஃபரா மாகாணத்தில் அரசுப் படைகள் நடத்திய தேடுதல் வேட்டையில்தலிபான்தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த 35 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டு மேற்கு பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் மற்றும் பல்வேறு சிறிய தீவிரவாத குழுக்களின் ஆதிக்கம் சமீபகாலமாக மீண்டும் தலை தூக்கத் தொடங்கியுள்ளது. சில பகுதிகளை கைப்பற்றி அங்கு உள் ளூர் வரிவிதிப்பு உள்ளிட்ட நிர்வாகங்களை தங்கள் வசப்படுத்தியுள்ள தலிபான்கள் போட்டி அரசாங்கத்தை நடத்தி வருகின்றனர்.

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு வரும் 28 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தீவிரவாதிகள் மீது ஈவிரக்கம் காட்டாமல் நடவடிக்கை எடுக்குமாறு அந்நாட்டின் இராணுவம் மற்றும் பொலிஸார் ஆகியோரை கொண்ட தீவிரவாத ஒழிப்பு கூட்டுப்படைகளுக்கு அதிபர் அஷ்ரப் கானி உத்தரவிட்டுள்ளார். இந்தப் படைகளுக்கு ஆதரவாக அரசுக்கு விசுவாசமான தன்னார்வலர்கள் படையும் இணைந்துள்ளது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் மேற்கு பகுதியில் ஈரான் நாட்டை ஒட்டியுள்ள ஃபரா மாகாணத்துக்குட்பட்ட அனார் டாரா மாவட்டத்தில் தலிபான்கள் நிழல் அரசங்கத்தை நடத்தி வந்தனர்.

அங்கிருக்கும் தலிபான் தீவிரவாதிகளை குறி வைத்து இராணுவம் மற்றும் விமானப்படையினர் நேற்றுமுன்தினம் இரவு நடத்திய தாக்குதலில் 35 இற்கும் அதிகமான தலிபான்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் அந்த மாவட்டத்தின் தலிபான் தலைவர் சய்யத் அஸிம் மற்றும் உளவுத்துறை தலைவர் எஸ்மத்துல்லா ஆகியோர் முக்கியமானவர்கள் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சவூதி மீதான வான் தாக்குதலுக்குப் பின் மசகு எண்ணெய் விலை 12 வீதம் உயர்வு



வொஷிங்டன்,செப்.17
சவூதியில் எண்ணெய் வயல் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி உற்பத்தி குறைந்ததையடுத்து, சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை 12 சதவீதம் உயர்ந்துள்ளது.

சவூதி அரேபியாவில் அப்காய்க் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மற்றும் குராய்ஸ் என்ற இடத்தில் உள்ள எண்ணெய் வயலைக் குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தினர். இதனால் சுமார் 50 லட்சம் பீப்பாய் எண்ணெய் எரிந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலால் சவூதியில் ஏறக்குறைய 50 சதவீத எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 57 லட்சம் பீப்பாய் மசகு எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.


உலகிற்கு தேவையான 10 சதவீத மசகு எண்ணெய் சவுதி அரேபியாவில் உற்பத்தியாகும் நிலையில், அங்கு நடத்தப்பட்ட ஆளில்லா விமான தாக்குதலும், அதன் காரணமாக ஏற்பட்ட உற்பத்திக் குறைப்பும் சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கி உள்ளன.

ஏற்கனவே அமெரிக்கா, சீனா இடையிலான வர்த்தக போர் காரணமாக, சர்வதேச பொருளாதாரத்தில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது மசகு எண்ணெய் விலையும் உயர்ந்தால், சர்வதேச பொருளாதாரத்தில் அவை கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது.

இந்த நிலையில், ஆளில்லா விமான தாக்குதலை தொடர்ந்து எண்ணெய் உற்பத்தியை 50 சதவீதமாகக் குறைத்திருப்பதாக சவூதி அரேபியா நேற்று முன்தினம் அறிவித்தது.

# மெக்ஸிக்கோவின் கிணற்றில் 44 மனிதரின் சடல எச்சங்கள்

மெக்ஸிக்கோ, செப்.16
மெக்ஸிக்கோவின் மத்தியில் உள்ள ஜலிஸிகோ மாநிலத்தில் கைவிடப்பட்ட கிணறு ஒன்றில் இருந்து தடயவியல் துறை வல்லுநர்கள் 44 மனித சடலங்களின் எச்சங்களைக் கண்டெடுத்து உள்ளனர்.



அந்த கிணற்றிலிருந்து மனித உடல்களின் சிதிலங்கள் 119 கறுப்புப் பையிலிருந்து எடுத்துள் ளனர்.கிணற்றிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது என அதன் அருகே உள்ள குடியிருப்புகளில் வசிப்பவர்கள் முறைப்பாடு அளித்தனர்.மனித உடல்கள் துண்டு துண்டாக வெட்டப்பட்டுள்ளன. இவை யாருடைய உடல் பாகங்கள் என அடையாளம் காணப்படவில்லை.

அந்தப் பகுதியில் காணாமல் போனவர்களின் உறவினர்கள், உடல் பாகங்களை அடையாளம் காணப்படச் சிரமமாக உள்ளதால் தடயவியல் நிபுணர்களை அனுப்புமாறு அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளனர்.

# இவ்வாண்டு பாகிஸ்தான் 2,050 முறை அத்துமீறி தாக்குதல்களை நடத்தி 21 பேரைக் கொன்றது!

## பாகிஸ்தான் மீது இந்தியா குற்றச்சாட்டு

புதுடில்லி,செப்.17

பாகிஸ்தான் இந்த ஆண்டு இதுவரை 2,050 முறை சண்டை நிறுத்தத்தை மீறி நடத்தி உள்ள தாக்குதல்களில் 21 இந்தியர்கள் பலியாகி உள்ளனர் என இந்திய மத்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் குற்றம் சாட்டி உள்ளார்.



காஷ்மீரில் எல்லை கட்டுப்பாட்டுக்கோடு மற்றும் சர்வதேச எல்லை பகுதிகளில், 2003 ஆம் ஆண்டு காணப்பட்ட சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறி அடாவடித் தாக்குதலில் ஈடுபடுவதை பாகிஸ்தான் வழக்கமாக்கி கொண்டுள்ளது.

அந்த வகையில் இந்த ஆண்டு இதுவரை பாகிஸ்தான் 2,050 முறை சண்டை நிறுத்தத்தை மீறி தாக்குதல்கள் நடத்தி உள்ளது. இந்த தாக்குதல்களில் 21 இந்தியர்கள் பலியாகி உள்ளனர் என மத்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் ரவீஷ்குமார் பகிரங்கமாக குற்றம் சாட்டி உள்ளார்.

இதுபற்றி மேலும் அவர் கூறுகையில் –

எல்லை கட்டுப்பாட்டு கோடு, சர்வதேச எல்லையில், 2003 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை பின்பற்றி நடக்க வேண்டும்; அமைதியையும், சமாதானத்தையும் கடைப் பிடிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் தனது படைகளுக்கு அறிவுறுத்த வேண்டும் எனப் பல முறை இந்தியா வலியுறுத்தி உள்ளது. – எனக் குறிப்பிட்டார்.



மேலும், இந்திய படைகள் அதிகபட்ச கட்டுப்பாட்டை கொண்டுள்ளன. அத்துமீறிய தாக்குதல்களுக்கும், பயங்கரவாதிகள் எல்லை தாண்டி ஊடுருவ முயற்சிப்பதற்கும் அவை பதிலடி கொடுக்கின்றன எனவும் அவர் கூறினார்.

# மதுபோதையில் ஏற்பட்ட தகராறில் இருவர் கொலை

தமிழ்நாடு பெரம்பலூர் மாவட்டம் குன்னம் அருகே மது போதையில் ஏற்பட்ட தகராறில், கத்தி மற்றும் பியர் போத்தலால் குத்தி இருவர் கொலை செய்யப்பட்டனர்.

அரியலூர் மாவட்டம், இலுப்பையூர் கிராமத்தை சேர்ந்த ஆனந்த் என்பவர் மனைவியுடன் பெரம்பலூர் மாவட்டம் நல்லறிக்கை கிராமத்தில் உள்ள மாமனார் வீட்டில் வசித்து வந்தார். இந்நிலையில் நேற்றிரவு அய்யனார் கோவில் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில் சண்முகம் என்பவர் ஆனந்திடம் மதுபோதையில் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

வாக்குவாதம் முற்றியதில், பாரில் காய்கறி வெட்ட வைத்திருந்த கத்தியை எடுத்து சண்முகத்தின் நெஞ்சுப்பகுதியில் ஆனந்த் குத்தியுள்ளார்.

இதில் நிலைகுலைந்து கீழே விழுந்த சண்முகம் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவல் அறிந்து சென்ற சண்முகத்தின் சகோதரர் முருகானந்தம் மற்றும் அவரது நண்பர்கள் டாஸ்மாக் கடையில் மது அருந்திக் கொண்டிருந்த ஆனந்தை பியர் போத்தலால் குத்தியும் உள்ளனர். இதில் படுகாயம் அடைந்த ஆனந்த் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

# சாலையோரக் குப்பைக் கிடங்கில் எழுந்த பெரும் நெருப்புச் சூறாவளி



பிரேசில் நாட்டில் ஏற்பட்ட – அரிதாக உருவாகும் – நெருப்புச் சூறாவளி பார்ப்போரை அச்சத்தில் ஆழ்த்தியது.

சாண்டா ஹெலனா என்ற இடத்தில் GO 210 என்ற நெடுஞ்சாலை ஓரம் உள்ள குப்பைக் கிடங்கில் சிறிய அளவில் நெருப்பு ஏற்பட்டது.

சிறிது நேரத்தில் அப்பகுதியில் சுழற்காற்று வீசியபோது அதனுடன் பற்றி எரிந்த தீயும் சேர்ந்து கொண்டதால் அங்கு நெருப்புச் சூறாவளி உண்டானது.

வானுக்கும் பூமிக்குமாக விஸ்வரூபம் எடுத்துச் சுற்றிச் சுழன்ற நெருப்புச் சூறாவளியைக் கண்டு அவ்வழியே சென்றவர்கள் அச்சமடைந்தனர். இயற்கையின் இத்தகைய நிகழ்வு அரிதாகவே நடக்கும் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# டோக்கியோ ஒலிம்பிக்கின் போது செயற்கைப் பனி பொழிவிக்கப்படும்

## பரீட்சார்த்த முயற்சியில் ஏற்பாட்டுக் குழு வெற்றி



செயற்கைப் பனியைப் பொழிவிப்பதில் 2020 டோக்கியோ ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழு புது முயற்சியில் இறங்கியுள்ளது.

அடுத்த வரும் கோடையில் ஒலிம்பிக் போட்டிகள் நடக்கும்போது வெப்பம் அதிகமாக இருக்கும் என்பதால் போட்டி நடக்கும் இடங்களில் வானத்தில் இருந்து செயற்கைப் பனியைக் கொட்ட ஏற்பாட்டுக் குழு திட்டமிட்டுள்ளது.

அதன் சோதனை முயற்சியும் தற்போது ஓரளவு வெற்றி பெற்றுள்ளது. போட்டி இடம்பெறும் சில விளையாட்டரங்குகளுக்கு மேலாக இது சோதனையிட்டு பார்க்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளின் போது வெப்பத்தால் பார்வையாளர்கள், விளையாட்டாளர்கள், தொண்டு ஊழியர்கள் பாதிப்படையக்கூடாது என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை என்று ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

(உ)

# ஸ்பெயினில் கொட்டித் தீர்த்த வரலாறு காணாத பேய் மழை!

ஸ்பெயின் நாட்டில், தொடர் மழை காரணமாகக் கட்டடங்களுக்குள் தேங்கிய வெள்ளத்தை இராணுவ வீரர்கள் இராட்சதக் குழாய்கள் மூலம் வெளியேற்றி வருகின்றனர்.



ஸ்பெயின் நாட்டின் தென் கிழக்கு பகுதியில் கடந்த சில நாள்களாக வரலாறு காணாத மழை பெய்தது. இதனால் சாலைகள், வீடுகள் மற்றும் அடுக்குமாடி கட்டடங்களுக்குள் வெள்ளம் புகுந்தது. வாகனங்களும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. மேலும் கன மழையில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர்.

சுமார் 3,500 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டமையோடு, தற்காலிகமாக அங்குள்ள ரயில் நிலையங்கள் மற்றும் விமான நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மழை சற்று ஓய்ந்து இயல்பு வாழ்க்கை திரும்பத் தொடங்கியுள்ளது.

தேங்கியிருக்கும் மழை காரணமாக தொற்று நோய்கள் ஏற்படுவதை தவிர்க்க ஊழியர்கள், கட்டடங்களிலிருந்து நீரை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடன் அந்நாட்டு ராணுவ வீரர்களும் இணைந்து, ராட்சத குழாய்களின் உதவியுடன் கட்டடத்தின் கீழ் தளங்களில் தேங்கிய நீரை வெளியேற்றி வருகின்றனர்.



# லூயி ராணுவ மையத்தில் இந்திய அமெ. வீரர்கள் கூட்டு ராணுவப் பயிற்சி

அமெரிக்காவின் செயின்ட் லூயி ராணுவ மையத்தில் இந்திய - அமெரிக்கப் போர் ஒத்திகை நடைபெறுகிறது.

இருநாட்டு வீரர்களும் பல்வேறு உடற்பயிற்சிகளிலும் சாகசங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். உயரம் தாண்டி ஓடுதல், கயிறு கட்டி ஏறுதல் போன்ற பல சிரமமான பயிற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டனர்.

முன்னதாக இந்திய வீரர்கள் மூவர்ணக் கொடியை ஏந்தியபடி தொடக்க நாள் அணிவகுப்பில் கலந்து கொண்டனர்.

# கனடாவிலும் எழுக தமிழ்!

மொன்றியல், செப். 17

யாழ்ப்பாணம்முற்றவெளியில் இடம்பெற்ற எழுக தமிழுக்கு வலுச் சேர்க்கும் வகையில் புலம்பெயர் நாடுகள் பலவற்றிலும் எழுகதமிழ் ஆதரவுப் பேரணிகள் நேற்று இடம் பெற்றன.

கனடாவில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்னால் கனேடிய தமிழர் அமைப்புகளின் ஆதரவுப் பேரணி நேற்று இடம்பெற்றது.

மழைக்கும் மத்தியிலும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றிருந்த இந்தப் பேரணியில் பெருந்திரளானவர்கள் பங்கெடுத்துள்ளனர். முன்னராக நியூசிலாந்திலும் எழுகதமிழுக்கு வலுச் சேர்க்கும் ஆதரவுப் பேரணி இடம்பெற்றுள்ளது. (ஐ)






# மலையகத்திலும் மழை, மண்சரிவு

கொழும்பு, செப். 17

நாட்டில் தொடரும் கடும் மழை காரணமாக மலையகத்திலும் பல இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன

ஹற்றன், நோட்டன்பிரிட்ஜ் பிரதான வீதியின் எட்லி பகுதியில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.





## போக்குவரத்து தடை

மரம் ஒன்று முறிந்து விழுந்தமையினால் அந்த வீதியின் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளதாக நோட்டன்பிரீஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் வீதியின் போக்குவரத்து ஒருவழி போக்குவரத்து இடம்பெற்று வருவதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (ஐ)

# மழை நீடிக்கலாம்

கொழும்பு, செப். 17

நாட்டில் தற்போது காணப்படும் மழை நிலைமை அடுத்த சில நாள்களுக்கு மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, தென், மத்திய வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான மிகவும் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தவிர்த்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. தெற்கு, மேற்கு மற்றும் தென்மேற்கு ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் சில இடங்களில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 55 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலமான காற்று வீசுவதுடன் அந்தக் கடற் பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் கடற்பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

கடலில் பயணம்செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.09.2019 இல் வெளியிடப்பெற்றது.

# யாழ்ப்பாணத்தில் எழுக தமிழ் பதிவுகள்

















# யாழ்ப்பாணத்தில் எழுக தமிழ் பதிவுகள்

















# யாழ்ப்பாணத்தில் எழுக தமிழ் பதிவுகள்



















